XVII



12 ஜனவரி; 1947

SL
௯11, N30S
N47-17.50
199445

# சுதேச மித்தி

Vol. XVII. No. 50 12-1-47 Price 3 Ann



# SWADESAMITRAN ILLUSTRAT






குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.

**WOODWARD'S**

**GRIPE WATER**

**W. WOODWARD LTD. LONDON. ENGLAND**

...ர் இப்பொழுது மருந்து சாமான்கள் கட்டுப்பாடு அறிக்கையில் சேர்க்கப்
...டுகிறது. உபயோகிப்பவரின் விலை: பாட்டில் விலை ரு. 2-2-0.

# மது விலக்கு

அநேக குடும்பங்களின் வாழ்க்கையை உயர்த்தும்

## இது எப்படி ?

தினசரி மதுவின் காரண
ாக செலவு செய்த
பணத்தை சேமித்து

## நாஷனல்
## சேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை

வாங்குங்கள்

ஒவ்வொருவரும் 5 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரையில் வாங்கலாம்

தபாலாபிஸ்களிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடமாவது, சேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்

ADS 153

N. S. 17

தமிழில் ஹோமி

வைத்தியத்தை தபால் மூல
படித்துப் பயனடையுங்கள்
விவரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன்
எழுதுக. தமிழ் ஹோமியோபதி
காலேஜ், ஈரோடு.

ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு



பண்டிட் டி.கோபாலாச்சா

அருண

கர்பாசயரோக நிவா



அருண ஸ்
களின்
சுகத்திற்கு
யமான
டானிக்-மு
படி தவ
உபயோ
ஆரோ
த்தை
செய்
கை
ரக்ஷிக்க
ும்.

ஆயுர்வேதாஸ்ரம
தி-நகர் . . . . மதரா

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

சேலம் குகை

# ஸ்ரீ [illegible]டாம்பிகை பிலிம்ஸாரின்

## அன்பார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்

எமது பூரண விநியோக உரிமை பெற்ற படங்கள்.

| | |
|---|---|
| பதி பக்தி<br>...ப்ரநாராயணா<br>...க்ரம ஸ்திரீ சாகஸம் | சேலம் கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்கள் |
| ...யா மச்சீந்திரா (தெலுங்கு)<br>(...ன்றும்பா, மாலதி நடித்தது) | சேலம் ஜில்லா |
| ...மாரா தேஷ் அல்லது ஜெய்வீர்<br>(ஹிந்தி ஸ்டண்டு படம்)<br>(...ல்குமார் & அமீர் கர்நாடகி நடித்தது) | தமிழ்நாடு (சென்னை நகரம் உள்பட) மலபார் & மைசூர் ஸ்டேட் |

★

# ஸரஸ்வதி டாக்கீஸ்

## செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

சிறந்த தொனிக் கருவிகளுடன் கூடியது.

திருப்தியடைந்த பல்லாயிரக்கணக்கான சேலம் மக்களுக்குத் தங்கள் பொங்கல் வாழ்த்துக்களை அளிப்பதுடன் மேலும் பல உயர்ந்த படங்களை சீக்கிரம் வெளியிடவிருப்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

---

ஏஜண்டுகள் தேவை.




**சக்தி ஆருடம்!**

1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1வருட பலன் ரூ. 5. சக்தி கவசம் ரூ. 7-8. வி. பி. பி. அணா 5. ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம். S.I.

உங்கள் கால பலன் பக்கம் 24

# சுதேசமித்திரன்

வாரப் பதிப்பு

திருவிளையாடல் பக்கம் 28

விய௵ மார்கழி மீ 28௳ ★ 1947-௵ ஜனவரி மீ 12௳

## லீகுக்கு உறைக்குமா?

பிரிட்டிஷ் சர்க்கார் சென்ற மாதம் 6-ந் தேதி யன்று இந்தியா பற்றி விடுத்த அறிக்கையை ஏற்றுக்கொள்வதென்று போன வாரம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்து விட்டது. காங்கிரஸ் காரியக்கமிட்டி செய்த சிபார்சு இது. ராஷ்டிரபதி கிருபலானியும், பண்டித நேருவும் மகாத்மாஜியை நேரில் கண்டு விவாதித்த பின்னரே, இத்தகைய முடிவைக் காரியக்கமிட்டி செய்திருக்கிறது என்பதை ங்கு நினைப்பூட்டுவது பொருந்தும். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இத்தீர்மானம் லேசில் நிறைவேறவில்லை. எதிர்ப்பு மிக்க லமாயிருந்திருக்கிறது. காங்கிரஸ் படிப் டியாக நழுவி விடுவதாகவும், அது பலவீனப் பட்டிருக்கிறதென்றும் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் எடுத்துக்காட்டினர். பிரிட்டிஷாரின் போக்கு, லீகின் விபரீத முறை இவை கண்டு கொதிப்பேற்படுவது இயற்கைதான். பண்டித நேருவும், ஏனைய தலைவர்களும் இதை உணராமலில்லை. ஆனால் கொதிப்பிலும், ஆவேசத்திலும் நிதானத்தைக் கைவிடுவது நேர்மையா? ஜவாஹர் இதை நன்கு விவரித்துச் சொன்னார். கொள்கை எதுவும் இதனால் கைநழுவி விடவில்லை. கூர்ந்து கவனித்தால் விஷயம் விளங்கும். ஆயினும் ஒன்றுண்டு. லீகின் ஒத்துழைப்பைப்பெற காங்கிரஸ் எவ்வளவு தூரம் சமரஸ மனோபாவத்துடன் நடந்துகொண்டிருக்கிறது என்பதற்குத் இத் தீர்மானம் ஓர் சிறந்த ருசு.

டிசம்பர் 6-ந்தேதி அறிக்கையில்கண்ட பிரிட்டிஷ் வியாக்யானம் முக்கியமாக இரு விஷயங்களைப்பொறுத்தது. ஒன்று தொகுதி வட்டத்தில் மாகாணங்கள் கட்டாயமாகச் சேர்ந்து தானாகவேண்டுமா என்பது; மற்றொன்று, மாகாண அரசியலையும், தொகுதி வட்ட அரசியலையும் நிர்ணயிக்கும் பிரிவுகளில் வாக்குக் கணக்கு எடுக்கும் முறையென்ன என்பது. விவாதத்திற்கிடமான இவ்விரு பிரச்னைகளிலும் சமஷ்டிக் கோர்ட்டின் தீர்ப்புக்குக் கட்டுப்பட காங்கிரஸ் தயார். ஆனால் லீகினரும், பிரிட்டிஷ் சர்க்காரும் தாங்கள் அதற்கு இணங்க முடியாதென்று சொல்லிவிட்டார்கள். அரசியல் நிர்ணய சபையை உருப்படாமல் அடித்துவிட வேண்டுமென்பதே நோக்கம். டிசம்பர் 6-ந் தேதி அறிக்கை அதற்கு மற்றொரு ருசு. நமது சுதந்திர அரசியலை வகுத்துக் கொள்வதற்கு, ஏற்கனவே உருவாகியுள்ள அரசியல் நிர்ணய சபையை விட இப்போதைய நிலையில் வே சிறந்த சாதனம் எதுவுமில்லை. இச்சாதனம் கூடியவரை நமக்கு விசேஷமாகப் பயனளிக்க அரசியல் நிர்ணய சபை கூடியவரை அதிகமான பிரதிநிதித்துவமுள்ளதாக இருக்கவேண்டுமென்பதில் தேசத் தலைவர்கள் சிரத்தை காட்டுவது இயற்கை. அச்சபையின் லட்சியத் தீர்மானம் ஒத்தி வைக்கப்பட்டதும் அக்கருத்துடன் தான். அதே மனோபாவமே, அதாவது அரசியல் நிர்ணய சபையில் இதுவரை கலக்காதவர்கள் இனியாவது கலந்துகொள்ளத் தன்னாலான அனைத்தையும் செய்யவேண்டுமென்ற ஆவலே அ. இ. கா. கமிட்டியின் தற்போதைய முடிவு கும் அடிப்படை.

இம்முடிவு மாகாண சுதந்திரத்திற்கு உ வைத்து விடுமென அக்கமிட்டியில் சிலர் பே னர். ஆனால் எந்த மாகாணத்தையுமோ அ லுள்ள எந்தப் பகுதியையுமோ அதற்கு இஷ் மில்லாத ஒரு ஏற்பாட்டுக்கு உட்படுத்தும் எண் ணம் காங்கிரஸுக்குச் சிறிதும் கிடையாது. மேற்குறித்த தீர்மானம் இதைத் தெளிவாக் கிறது. நிர்ப்பந்தம் செய்ய முயற்சி நடக் மாயின், அதை குலைக்க சம்பந்தப்பட்ட மாகா ணமோ பகுதியோ தன்னிஷ்டம்போல் நட வடிக்கை எடுத்துக் கொள்ளலாமென்று தீ னம் கூறுகிறது. லீகின் ஒத்துழைப்பைப் காங்கிரஸ் தனது கொள்கைக்குப் பங்கமி தன்னாலான அனைத்தையும் செய்யத் த என்பதை இத்தீர்மானத்தைவிடச் சிற முறையில் தெளிவாக்கியிருக்க முடியா இதன் பின்னரேனும், உடன்பாடு செய் கொள்வதே அனைவருக்கும் க்ஷேமமென் லீகினருக்கு உறைக்குமா?

★

# இந்தோ-சீனுவில் சுதந்திர வதை

இந்தோ சீனுவில் சுதேச மக்களின் சுதந்திர இயக்கத்தை பிரஞ்சுக்காரர்கள் பகிரங்கமாக வதைத்து வருகின்றனர்கள். சுதேசக் குடியரசரான வியட்னும் சர்க்காரின் படைக்கும், பிரஞ்சுத் துருப்புகளுக்கும் போராட்டம் வலுத்துக்கொண்டிருக்கிறது. ஒரு நேர்மையான சமரசத்துக்கு குடியரசு சர்க்கார் தயாராயிருக்கின்றனர்; இப்போதும் நிலைமை மிஞ்சிப்போய்விடவில்லை; தாம் சமரசம் பேசுவதற்குத் தயார் என்று வியட்னும் சர்க்காரின் தலைவர் பிரஞ்சு அதிகாரிகளுக்கு ஒரு அறிக்கை விடுத்தார். ஆனால், தற்போது இந்தோ சீனுவிலுள்ள பிரஞ்சு காலனி மந்திரி அதற்கு அளித்த பதிலென்ன? முதலில் ராணுவ அடிப்படையில் ஒரு முடிவு கட்டியாக வேண்டும்; பிறகுதான் சமரசத்தைப்பற்றி சிந்திக்க முடியும் என்று அவர் கூறுகிருர்.

இதற்கிடையில் இந்தோ சீனுவுக்கு பிரான்ஸ் முதலிய இடங்களிலிருந்து மேன்மேலும் பிரஞ்சுத் துருப்புகள் போய்ச்சேர்ந்துகொண்டிருக்கின்றன.

## சீனுவில் சமரச முறிவு

சீனுவில் சியாங் கட்சிக்கும், பொதுவுடமைக்கட்சிக்கும் ஒரு சமரசம் விளைக்க இதுவரை நடந்த முயற்சி சிறிதும் பலிக்கவில்லை என்று சீனுவுக்கு அமெரிக்காவின் விசேஷ தூதராகச் சென்ற ஜெனரல் மார்ஷல் தெரிவிக்கிருர். "இருதரப்பினரும் ஒருவர் மீதொருவர் கொண்டுள்ள சந்தேகமும், அவநம்பிக்கையும் மிகவும் ஆழ்ந்தவை. சீனுவில் ஒரு பொதுவுடமை சர்க்கார் ஏற்படக்கூடாதென்று சியாங் கோஷ்டியினர் உறுதி கொண்டிருக்கின்றனர். முதலில் பிரிட்டிஷ் அல்லது அமெரிக்க ஜனநாயக முறையில் ஆரம்பித்து இறுதியாக பொதுவுடமை முறையை ஸ்தாபிப்பதே தங்கள் நோக்கம் என்று பொதுவுடமைத் தலைவர்கள் அறிவிக்கிருர்கள்.



# அட்டைப் படம்

சென்ற மாத மத்தியில் நெல்லை ஸங்கீத சபையின் முதலாவது ஆண்டுவிழா திருவனந்தபுரம் ஸ்ரீமான் டி. லக்ஷ்மணப் பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இச்சபையின் ஆரம்பவிழாவிலும் ஆண்டுவிழாவிலும் பாடும் சந்தர்ப்பம்பெற்ற ஸ்ரீமான் வி. வி. சடகோபனுக்குச் சபையின் சார்பாக "கானரத்ன" என்ற பட்டம் வைபவத் தலைவர் ஸ்ரீமான் லக்ஷ்மணப் பிள்ளையால் வழங்கப்பட்டது. ஸ்ரீமான் சடகோபனுக்குக்கிடைத்துள்ள இப்பட்டம் சகலவிதத்திலும் பொருத்தமாகி அவரது ஸங்கீத நடை கவர்ச்சிகரமாகி வியாபிக்க வேண்டுமென்பது ரஸிகர்களின் விருப்பம். அவ்விருப்பம் நிறைவேற வேண்டுமென்ற ஆமோதிப்போடு நாம் இவ்விதழின் அட்டையில் அவரது படத்தைப் பிரசுரிக்கிறோம்.



இந்திய சர்க்காரின் தொழில் மந்திரி ஸ்ரீ ஜகஜீவன்ராம் தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின்போது பல ஆலயங்கள் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்டன

(இடது)

திருவாரூரில் சமீபத்தில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி ஆலயம் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்டபோது எடுத்த படம்.



வரகூர் வேங்கடதாஸன்

33

# 'முற்றுகை'

இடியொலி கேட்ட விஷநாகம் போல் அறிவு கலங்கி நின்றுன் நந்திவர்மன்; கேட்டை உணர்த்தும் முரசொலி அவ்வரண்மனையில் முழங்கியதை அவன் என்றுமே கேட்டதில்லை. அவனுக்கு முன்—ஒரு நூற்றுண்டுக்கு முன் இவ்வித முரசொலி அவ்வரண்மனையில் முழங்கியது உண்டாம்; எதிர்பாராத வகையில் பகையரசர் நாட்டுக்குள் புகுந்துவிட்டால், உடனே அச்செய்தியை அரசன் அறியச் செய்ய இவ்விதம் 'முரசொலி' எழுப்பவேண்டும். உண்மையான செய்தி என்பதற்கு இம்முரசொலியே நிரூபணம்.

அதனுலேயே 'முரசொலி'யின் உண்மை எதுவோ என்று அறிவு கலங்கினுன் பல்லவ வேந்தன்; அவன் பயந்துவிடவில்லை; அநிருத்தரையும், உதயசந்திரனையும் பார்த்தான். ஒரு கணத்தில் அவன் கலக்கம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. உக்கிரமான கோபமும் தாபமும் கொண்டு நின்றுன்.

"உதயசந்திரா,......உண்மையை அறிந்துவா!" என்று கட்டளையிட்டான் நந்திவர்மன்.

"போய் வா!" என்றுர், கவிஞர் அநிருத்தர். அவர் சற்றும் அமைதி குலைந்து காணப்படவில்லை.

"வேந்தரின் ஆக்ஞை வெல்வதாக!" என்று கம்பீரச் சொற்களைக் கூறிவிட்டுப் பந்தெனக் குதித்தோடினுன், போர்த்தினவு கொண்ட உதயசந்திரன்; அவன் மகாசாமந்தாதிபதியல்லவா?

அநிருத்தர் நகைத்துக்கொண்டார்.

"பல்லவேந்திரா,...நாம் பேசிக்கொண்டிருந்தது என்ன? இப்போது ஏற்பட்டிருக்கும் நிலை என்ன?...நீ என்னவென்று நினைக்கிருய்?" என்றுர்.

குன்றெனக் குவிந்த தோளாளுகிய நந்திவர்மன், இருகைகளாலும் தோள்களைக் கொட்டிக்கொண்டான். இரும்பெனத் திண்ணிய கால்களைப் பெயர்த்து வைத்து அநிருத்தருக்கு முன் நின்றுன்.

"நான் நினைப்பது என்ன? நாட்கள் ஓடிவிட்டனவே!......அந்தப் பாண்டியனைப் பிடித்துக் கொணர வேண்டியிருக்க,...அவனே...வந்துவிட்டிருப்பான்!......விதி அவனைப் பிடர்பிடித்து உந்தியிருக்கும்..." என்றுன் பொருமிய வார்த்தைகளால்.

"பாண்டியன்......மகத்தான படைவலியுடையவன் என்பதை மறந்து பேசுகின்றுய்......"

"நான் மறக்கவில்லை; பல்லவ ராச்சியத்தில் எத்துணைப் படைகள் உள்ளன என்பதை நீங்கள் நினைவில் வைத்திருந்தால்.....இவ்விதம் பேசுவீர்கள் என்று..."

"இல்லை;... பாண்டியன்... பக்க பலமுடையவன் அதனுல் நீ...... அவனை நன்றாக மதிப்பிட்டுப்பார்... நமக்கு வெற்றிதான் என்றுலும்... நீ அமைதியாகவே இருக்க வேண்டும்:..உன்னைப்பொறுத்த வரையில் மிகவும்.........கவனமாக நடந்து கொள்..."

"அநிருத்தரே...மிகவும் நல்லது தங்கள் அறிவுரையை நான் அறிந்து நடந்து கொள்கிறேன்:... என் முன்னேனை— பெருமை பெற்ற மகாமல்லன் பெற்ற 'மல்ல' பிருது யான் பெறவேண்டுமானுல், பாண்டியனுடன் மல்ல யுத்தம் புரிந்து பெறுவேன். இல்லையேல் ...பல்லவ சக்கரவர்த்திக்கு உரிய மல்ல பிருதை யான் இழந்துவிட்டவனுவேன்..." என்று வஞ்சினவுரைகளைக் கூறினுன்.

"நந்திவர்மா,......உன் வெற்றிப் புகழ் சரித்திரத்தில் என்றும் அழியா ஓவியமாக விளங்கும். 'பல்லவ ஸம்ராட்' என்ற பெருமை உனக்குத்தான் உரியது. ஆனுல்... நான் சில விஷயங்களில் உனக்குப் போதனை செய்வது... விரும்பத் தக்கதல்ல..என்று நீ நினைப்பாய்... ஆனுலும் நான் என் கடமையைச் செய்யத் தவறுவது......மிகவும் இழிவென்று எண்ணுகிறேன். என்று அநிருத்தர் சொன்னுர்.

"அப்படியில்லை!...தங்கள் அ[illegible]வுரையை நான் என்றும் [illegible] கணிக்க முடியாது...' என்று [illegible]வர்மன் சொன்னுன். அப்[illegible] சிவமாறன் கடுகிய நடை[illegible] அங்கே வந்து சேர்ந்தான்.

"பல்லவ சார்வபௌம!... என் மகள்...இனி எனக்கு மகளல்ல!... அவள் சாகஸத்தை........எதிர்க்க யாராலும் முடியாது. நீ ஒருவனே அவளை வசப்படுத்த முடியும்: மகாரதனை, நீ... அவளை ஏற்றுக்கொள்—...அவளை அடைவதில் பின்னடையாதே! என்னைத் தந்தை என்று அவள் மதித்தவளாகத் தெரியவில்லை. உலகமே அவளுக்கு முன் ஒரு துரும்பாகத் தோன்றுவதுபோல் இன்னமும் பேசுகின்றாள். 'மாலை'உன் சூழ்ச்சியால் களவு செய்யப்பட்டது என்றே மனம் பதறிப் பேசுகிறாள். அவள் பதற்ற வார்த்தைகளை நான் கேட்கவிரும்பவில்லை. ஒரே லட்சியம் எனக்கு முன் உருவாக நிற்கின்றது—அது பாண்டியனை, முறியடித்துப் பழிதீர்ப்பது: அதன்பின் எது எப்படியானால் என்ன?...... என் உயிருள்ளவரையில் நான்' அவளை அவன் அடைவதற்கு மனம் ஒப்ப முடியாது. அவள் மனம் அழிந்து மாய்ந்தாலும்-மாய்ந்துபோகட்டும்; என் மானம் மாய்ந்துபோக மனமொப்பேன்!..." — இவ்விதம் கூறினவனாய் அவசமான நிலையில் ஆதனத்தில்சாய்ந்து கொண்டான்.

'பாவம்!...கிழவயதில் இந்த மன்னவனுக்கு ஏன் இந்தக் கலக்கம்?' என்றுதானே தோன்றுகிறது!

சிவமாறனின் பேச்சைக் கேட்டு நந்திவர்மனும், அநிருத்தரும் நகை செய்தார்கள்.

"பிரபு!......கங்க கன்னிகை அப்படி என்ன சொல்லிவிட்டாள்?" என்றான் நந்திவர்மன்.

"இனி என்ன சொல்ல வேண்டும்?....பாண்டியனை எதிர்நோக்கி நிற்கும் அவளை..........படுதோல்வி அடையச் செய்ய, தருணம் வரவில்லையே" என்றான் தாழ்ந்த குரலில் பெருமூச்சு விட்டுக் கொண்டு.

"வந்து விட்டது!..." என்று நந்திவர்மன் சொல்லிக்கொண்டிருக்கையில் ...ய சந்திரன் அவ்விடம் ...ந்தான்.

...வனுடன் ஹிரண்ய மஹா ராஜா, ஒற்றர் ...னை வீரன் தானு ...வரும் வந்தனர்.

நந்திவர்மன் வியப்புமேலிட்டவனாய்த் தந்தையாகிய ஹிரண்ய வர்மரை வணங்கிவிட்டு, ஆதனத்தில் அமரும்படி வேண்டிக்கொண்டான். ஹிரண்யவர்மர் ஆதனத்தில் அமர்ந்தார்.

ஒற்றர் தலைவனான தானுரவியும், உதயசந்திரனும் தலைவணங்கி நந்தி வர்மனுக்கு முன் நின்றார்கள்.

"பிரபு......பாண்டிய சேனை நம் நகர் எல்லையில் வந்து குவிந்த வண்ணமாக இருக்கிறது. பாலாற்றின் கரையெங்கும் தெற்குத் திக்கிலும், கங்கபாடியின் பக்கத்திலிருந்து மேற்குத் திக்கிலும் இடையீடில்லாமல் படை வரிசைகள் அணிவரிசைகளு அணி வகுத்தபடியே வந்து நெருங்குகின்றன... வடமேற்குப்புறத்திலிருந்து வாணகப்பாடி, நுளம்பபாடிப் பக்கங்களிலிருந்து சளுக்கியப் படைகள்வந்து நெருங்கிக்கொண்டிருக்கின்றன. பல லட்சம் படைகள் வந்து நெருங்குவதால் காஞ்சி நகரம் பெரும்பாலும் முற்றுகையிடப் பட்டு விட்டது......நம் ஒற்றர் படை எல்லைப்புறங்களில் பின்னடைந்து வருகின்றன. பொழுது புலருமுன்பாக நாம் ஆயத்தமாக வேண்டும்...அடியேன் இச்செய்தி உணர்த்தவே முரசறைந்தது..." என்று கூறினான் ஒற்றர் தலைவனான தானுரவி.

இடிமேல் இடி மோதினாற் போல் இருந்தது அவன் பேச்சு. அனைவரும் பேச்சு மூச்சற்றார்கள்.

"சளுக்கியப் படைகளும் வருகின்றனவா?..." என்று அமைதியாகக் கேட்டான் நந்திவர்மன்.

"வேந்தே!...சளுக்கியப் படைகள்...மிக வேகமாக முன் வந்து கொண்டிருக்கின்றன;......" என்றான் தானுரவி.



நந்திவர்மா!...இந்தச் சளுக்கிய வேந்தன் உன்னுடைய வலியை அறியவில்லை. முன்பும் இதேபோல் பாண்டியனும், விக்கிரமாதித்தனும் உறையூரில் போர்க்கோலம் கொண்டு எதிர்த்தபோது உன்னுடைய முன்னோனான ப்ரமேச்வரன் தன்னந்தனியே அவர்களை எதிர்த்தான். முடிவில் விக்கிரமாதித்தன் ஓடிவிட்டான்; அவனுடைய கொள்பேரனான இவனும் விக்கிரமாதித்தன் தான். அவனைப் போன்றே இவனும் ஓடிவிடுவான்;...சளுக்கியனுடைய உதவிக்காகவே இவ்வளவு நாட்கள் பாண்டியன் படையெடுக்கத் தாமதம் செய்திருக்கிறான்..." என்றார் ஆசாரியர் அநிருத்தர்.

"பாண்டியனுக்கு, சாளுக்கியர் உதவி புரிகின்றார்களா?..." என்று மருண்டு கேட்டான் சிவமாறன்.

"சிவமாற வேந்தர் பயப்படுவானேன்? பாண்டியனுக்கு உதவியாக யார் வந்தாலும், வீழ்ச்சியடைவது திண்ணம்...பாண்டியனுடன் விக்கிரமாதித்தனையும் விலங்கிட்டுக் கொணர்ந்து நம் நகர் வீதிகளில் வலம் செய்விப்போம்..." என்றான் நந்திவர்மன்.

"நந்திவர்மா!...நான் அறிந்த வரையில்...சளுக்கியனை வெல்வது...எளிதல்ல!... பெருவள நல்லூர்ப் போரில் தன் பிரதாப மகன் அடைந்த தோல்வியையும், அவமானத்தையும் எண்ணிப் பழி தீர்க்கவே, பாண்டியனுடன் சேர்ந்து விக்கிரமாதித்தன் வருகின்றான்...ஆகவே மிகவும் கவனமுடன் எதிர்த்து அவ்விருவரையும் சிறை செய்து விட்டால்......நீயே இந்தப் பாரத பூமிக்குச்சக்கரவர்த்தியாக மதிக்கப்படுவாய்..." என்றார் ஹிரண்ய வர்ம மகாராஜா.

"ஆம்! தாங்கள் சொல்வது உண்மையே தான். பெருவள நல்லூரில் அவன் பிரதிபிதாமகன் அடைந்த தோல்வியைக் காட்டிலும் மகத்தான தோல்வியை இவன் அடையப்போகின்றான்." என்றான் நந்திவர்மன்.

"நந்திவர்மா, இனி தாமதம் வேண்டாம்; தானு



...யை அனுப்பிவிடு; ...லைப்புறத்தில் இன்றும் ...ன என்ன நிகழ்ச்சிகள் ...க்கின்றன என்று...... ...ரிந்துகொள்வது......... ...சியமாகும்..." என்றார் ...த்தர்.

...ம்!...தானுரவி!..... ...வர்கள் எப்படி—எந்த ...த்தில் நிலை பெறுகிறார் ...ர்றும்...நம் நகரைத் தாக்கும் முயற்சி எப்படித் தொடங்கும் என்றும் அறியவேண்டும்: அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய். உண்மையை உணர்ந்து ...வ்வப்போது நான் ...குமிடத்தில் செய்தி தெரிவிக்க வேண்டுவது ...ன் கடமை...!" என்று கட்டளை ...டான்.

...க்கணமே அவன் புறப்பட...

...னுரவி!......இன்னும் ஒரு ...தி!...பாண்டியன், விக்கிரமாதித்தன்—இவருடைய வாசஸ் ...ங்கள் போர்க்களத்தில் எந்தப் ...தியில் இருக்கின்றன என்றும் ...ரிந்துகொண்டு தெரிவிக்க ...ண்டும்..." என்றார் ஹிரண்ய ...மர்.

"வேந்தே!...ஆக்ஞைப்படி ...வும் முறையே நடக்குமென்று அடியேன் தெரிவித்துக் ...ண்டேன். பல்லவ சார்வ ...ளமத்தை அழிக்க யாராலும் ...டியாது. பாண்டியனும், சளுக்கி ...னும் அகப்படும் வகையில் உண் ...மையை உணர்த்தக் கடமை ...டையேன்!...போய் வருகிறேன்,..." என்று கூறி விடை பெற்றுச் சென்றான் ஒற்றர் தலைவ ...ன தானுரவி.

...காபத்தால் கண் சிவந்தான் ...திவர்மன். "உதயசந்திரா, இந் ...யில் நம் படைகள் நிச்சயம் ...ாதாதென்று கருதுகிறேன்:..." ...ன்று கூறிக்கொண்டே ஆதனத் ...ல் அமர்ந்தான் நந்திவர்மன். ...நிருத்தரும் அமர்ந்துகொண்ட ...ரே "ஆம்!...படைப்பலம்... ...வசியம் வேண்டும்..." என்று ...றினார்.

...வேந்தருக்குக் கவலை வேண் ...: நான்கு லட்சம் படைகள்



கடல் மல்லைத்துறையிலிருந்து நம் நகரின் மேற்கு எல்லைப்புறம் வரையில் அணிவகுத்து நிற்கின்ன. மலைகளை உடைத்துத் தகர்த் ...லும்...தகர்த்துவிட முடியும்; நம் படைகளின் அணிவகுப்பைப் பிளக்கவோ தாக்கவோ முடியாது. தெற்குத் திக்கிலும், மேற்கிலும் நம் அணி வகுப்பை எதிர்க்க முடியாது: வடமேற்குப்புறத்தில் மட்டுமே இப்போது படைகளை அதிகம் அனுப்பியாக வேண்டும்:...... சளுக்கியரின் படையெடுப்பை நாம் முன்பு எதிர்பார்க்கவில்லை......இதனால் நாம் சிறிது ஏமாற்றப்பட்டிருக்கிறோம்..." என்றான் மகாசாமந்தாதிபதி.

"ஹூம் ...ஏமாற்றப்பட்டிருக்கிறோம்;......இல்லை —பகைவர்கள் ஏமாற்றமடைவது நிச்சயம்:......" என்றான் நந்திவர்மன்.

"இரண்டு லட்சம் பல்லவ படைகள் மேற்குத்திக்கிலிருந்து, வடக்கு மேற்கு எல்லைப்புறம் வரையில் இருக்கின்றன:...நாளையே சோள நாட்டுப் படைகள் வந்து விடுமல்லவா!..." என்றார் அநிருத்தர்.

"முத்தரையன் படைகளுடன் வந்து விடுவான் என்பது நிச்சயம். ஆனால் அவன் படைகளுடன் வருவதற்கு வழி...பகைப்படைகளைப் பிளந்துதான் வரவேண்டும்: இல்லையேல் கடல்மல்லைத் துறைமுகம் அடைந்து நகருக்குள் வரமுடியும்......அதைப்பற்றி நாம் இப்போது கவலைப்படுவதில் பயனில்லை. நாம் மேற்கொள்ளவேண்டிய காரியம் இனி போர்க்களம் செல்வதுதான்..." என்றான் நந்திவர்மன்.

"ஆம்!...ஆம்!..." என்று அனைவரும் கூறினார்கள்.

"நான் எதிர்பார்க்கவில்லை, சளுக்கியரின் எதிர்ப்பை!....எதனால் இப்போது சளுக்கியர் போருக்கு மனமொப்பினார்கள் என்பது புரியவில்லை" என்றான் சிவமாறன்.

"பாண்டியருக்கும், சளுக்கியருக்கும் உள்ள பழமை நட்புதான் காரணம். சடையன் ரணதீர பாண்டியனுக்கும், முதல் விக்கிரமாதித்தனுக்கும் எத்துணை நட்பு இருந்ததோ அவ்வளவுக்கு ராஜஸிம்ம பாண்டியனுக்கும் இன்றைய விக்கிரமாதித்தனுக்கும் நட்பு உண்டு..." என்றார் அநிருத்தர்.

"ஆம்..." என்றான் நந்திவர்மன்.

"நந்திவர்மா,...பகையை முதலிலேயே முறியடித்துவிட முயல வேண்டும்; நாலு புறத்திலும் பகைவர்கள் சூழ்ந்திருப்பதால்......நாம் சென்று போராடுவதை இப்போதே முடிவு செய்துகொள்ள வேண்டும்:...இதில் என் யோசனைப்படி...நடந்தால்...மிகவும் எளிதில் வெற்றியை அடையலாம்;..." என்றார் ஹிரண்யவர்ம மகாராஜா.

(தொடரும்)

'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்

# மகாகவி ஜனனம்



ஸாரஸ்வதன்

ஸத்யலோகத்தில் பிரம்ம ஸதஸ் கூடியிருந்தது. புண்யாத்மாக்கள் நிறைந்திருந்த அவ்விடத்தில் புனிதமான கோஷங்கள் கிளம்பிக்கொண்டிருந்தன. ஸரஸ்வதி தேவியின் வீணையிலிருந்து சுருதி சுத்தமான மதுரநாதம் எழும்பி, அங்கு குழுமியிருந்த ஸாதுக்களின் ஹிருதயங்களைப் பரவசப்படுத்தியது; மற்ருேர் பக்கத்தில் வேதாகமங்களில் தேர்ந்த மஹரிஷிகள் ஸ்வரபேதம் ஏற்படாமல் ஸாமம் இசைத்தார்கள்.

ஸபையின் ஒரு பக்கத்தில் பிரம்மதேவனுக்கு அருகில் மஹரிஷி துர்வாஸஸ் கண்களை மூடிக்கொண்டு மௌனத்தில் ஆழ்ந்திருந்தார். அம்முனிவரின் பக்கம் திரும்பிய வாணி வீணையை மீட்டுவதை நிறுத்திக் கலீரென நகைத்தாள்.

"தேவி! இதென்ன புதுமை? பிரம்மரிஷி துர்வாஸஸுக்கா இவ்வித அபசாரம் இழைக்கிருய்?" என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டார் பிரம்மதேவன்.

தேவி பிரம்மதேவனை நோக்கிக் கரங்குவித்துத் தலை குனிந்தாள்.

"தேவ! க்ஷமிக்க வேண்டும். துர்வாஸஸைப் பார்த்தபோது ஓர் பழைய கதை ஞாபகத்துக்கு வந்தது. முனீந்திரர்களை நான் எப்பொழுதும் அவமதிக்கக்கருதியதில்லை, நான் அவர்களின் அடிமை" என்ருள் தேவி ஸரஸ்வதி.

துர்வாஸஸ் மெதுவாகக் கண் திறந்தார்.

தேவி மேலும் சொன்ருள்:—"முன்னர் பேதை சகுந்தலை தம்மை உதாசீனம் செய்தாள் என்றெண்ணிக்கொண்டு, அந்தப் பெண்ணை எண்ணற்ற இன்னல்களுக்கு ஆளாக்கிய இந்தப் பிரம்மரிஷி கண்ணை மூடிக்கொண்டிருப்பதைப்பார்த்தபோது ஸ்திரீ புத்தியால் சிரித்தேன், ஸ்வாமி! என்னை க்ஷமிக்க வேண்டும்!"

வாணியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த துர்வாஸஸ் வெகுவாகப் பொங்கும் கோபத்தை பிரம்ம சந்நிதியில் அபசாரம் செய்யக்கூடாதென்று, அடக்கிக்கொண்டார்.

"அன்னையே, வாகீச்வரி! அதிதி ஸத்காரத்தையும் மறந்து-இல்லை, தௌஷ்ட்யத்தினல் திரஸ்கரித்து,— காதலுக்கு அதீனமாக இருந்த அந்தப் பெண்ணிடம் நான் கருணை காட்டினேன் என்று சொல்ல வேண்டும். இந்தமாதிரியாகப் பிரம்ம சிந்தனை செய்பவன் ஓர் ஆணுயிருந்தால், அந்த க்ஷணத்திலேயே, திரிநேத்ரதாரியை நிந்தித்த மன்மதனின் நிலையை அடைந்திருப்பான்......"

"பிர்மரிஷே! தாங்கள் யோகி. பிரம்மத்தைக் கண்டவர். தாங்கள் உலகத்தின் ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டவர். அப்பேர்ப்பட்டவர் கேவலம் ஒரு மனுஷ்யப் பெண்ணின் ஹிருதய விகாரங்களை எப்படி அறிந்துகொள்ள முடியும்? ஜிதேந்த்ரியரான தாங்கள் கூட இன்னும் கோபாதீனராய்த்தாம் இருக்கிறீர்கள்!" என்ருள் அன்னை வாகீச்வரி.

விவாதம் விருத்தியடைய மற்றக் கோஷங்களெல்லாம் ஓய்ந்தன. மஹரிஷிகள் எல்லோரும் துர்வாஸஸ்-ஸரஸ்வதி சம்பாஷணையைக்கவனிக்க ஆரம்பித்தார்கள்.

"வத்ஸ, துர்வாஸஸ்! உண்மையில் நீ சகுந்தலைக்கு இட்ட சாபம் பெரிய அநீதி. உன் தபோ பலத்திற்குப்பெரிய களங்கம். பூலோகத்திற்கு இந்த உண்மை தெரியாமற்போனலும் கூட இதைத் தேவதைகளிடமிருந்து மறைக்க முடியுமா?" என்ருர் பிரம்மதேவன்.

துர்வாஸஸ் சற்று மௌனமாயிருந்தார்.

"லோக பிதாவே! தாங்களுமா நான் செய்ததைக்குற்றம் என்று சொல்கிறீர்கள்? தாங்கள் கூட சகுந்தலை மீது உள்ள மகத்தா குற்றத்தை உணரவில்லை. பாப திற்குத் தக்க தண்டனை அ பவிக்க வேண்டாமா அந்தச் சகு தலை?"

"வத்ஸ! நான் ஸ்ரஷ்டா. ஜனங்களின் மனோவ்ருத்தி நான் அறிவேன். பெற்ற கூட நான் உணர்வதுபோல் குழந்தையின் ஹிருதய உணர முடியாது. சகு உன் விஷயத்தில் பராங்மு இருந்ததன் காரணம் அவ காந்தனைப்பற்றிய நினைவில் ச டிருந்ததால்தான். இதை அறியாததில் வியப்பு ஒன்றுமி நீ உலகத்தையெல்லாம் து வன். ஆனல் அவளோ உல காமபாசங்களுக்கு உட்பட்ட இந்தச் சிறு உண்மையை கோபத்தில் நீ மறந்துவிட்டா

துர்வாஸஸ் மௌனமாய் ருர். தன் குற்றம் இப்பொ அவருக்கு நன்ருக வி விட்டது.

"உன் மீது ஓர் சிறு கள இருப்பதைக்கூட நான் விரு வில்லை. அதற்கு நீ தகுந்த பி யச்சித்தம் செய்யவேண்டும்..."

"ஸ்வாமி! நான் செய்யவேண் யது என்ன? ஆக்ஞையிடுங்க உடனே செய்கிறேன்."

"நீ பூலோகத்தில் ஜனித்

"சாந்தம் பாபம்! ஸ்வாமி, தினல் சிந்திக்கவும் முடியா ஞையை இடுகிறீர்களே!"

"ஒவ்வொரு கர்மாவுக்கும் குணமான பலனை அனுபவி தீரவேண்டும். ஸ்ருஷ்டி நியதியை ஒருவரும் மீறமுடியா

பிரம்மதேவனின் வாக் துர்வாஸஸ் மௌனமாய் ஏ கொண்டார்.

"வத்ஸ! இதற்காக நீ வ வேண்டாம். உன் அன்னை வரி உனக்கு உதவி புரி யென்று கிருபை செய்தார் பிரம்மதேவன்.

தேவி துர்வாஸஸைப்பார்த்து மந்தஹாஸம் செய்தாள்.

தேவியின் திருமுகத்தைப் பற்று நோக்கினர் பிரம்மரிஷி துர்வாஸஸ். கொஞ்சம் கொஞ்சமாக ஸத்யலோகத்து ஸதஸ்ஸும், ஸாக்ஷிகளும் மறைந்து கொண்டிருந்தன. கடைசியில் துர்வாஸஸ் தம் நினைவை அறவே இழந்தார்.

* * * *

உஜ்ஜயினியையடுத்த கிராமத்தில் பசுக்களை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தான் இடையன் ஒருவன். மேற்கே செக்கர்வானத்தின் தோற்றம் கண் கொள்ளாக்காட்சியாக இருந்தது. எங்கிருந்தோ ஒரு சக்ரவாகப் பக்ஷி சப்தம் செய்தது அதற்குப்பதில் கூறுவதுபோல், மற்ருெரு திக்கிலிருந்து இன்னொரு சக்ரவாகம் பிரதி சப்தம் செய்தது. திடீரென்று ஓர் சின்னஞ்சிறு குழந்தை கதறும் சப்தம் கேட்கவே, அந்த இடையன் நாலா பக்கமும் பார்த்தான். பிறகு சப்தம் வந்த திக்கை நோக்கி ஓடினன். ஒரு வட விருக்ஷத்தில் கீழே மஹா தேஜஸ்வியான ஒரு குழந்தை கிடப்பதைக் கண்டான்.

ஐயோ, மனிதக் குழந்தையா? அல்லது ஏதாவது வனதேவதை இப்படிப் போட்டுவிட்டுப் போயிருக்குமா?

சாதாரண மனுஷ்யக் குழந்தைகள் போல இல்லையே இது? ராஜ வம்சத்துக் குழந்தைகளுக்குக் கூட இந்த அதிசயமான தேஜஸ் கிடையாதே!

எத்தனையோ நூற்ருண்டுகளுக்கு ஒரு முறை மஹான்கள் பூலோகத்தில் ஜனிப்பதாய்ச் சொல்லிக் கொள்ளுகிருர்களே, ஒருக்கால் அப்படியிருக்குமோ? ரிஷிகளுக்கும், தேவதா ஸ்திரீகளுக்கும் ஏற்படும் சம்பந்தத்தால் பிறக்கும் குழந்தைகளை அவர்கள் கைவிட்டு விட்டுச் செல்வதாக பாரதக்கதை வாசிப்பவர்கள் சொல்கிருர்களே, அந்த மாதிரி இருக்குமோ?

இடையன் மிகுந்த பயபக்தியுடன் அந்தக்குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்.

குழந்தையைத் தன் வீட்டில் ஸர்வ ஜாக்கிரதையுடன் வளர்த்து வந்தான். அந்தக் குழந்தையை நெருங்கும்போது அவனையறியாமல் பயபக்தி ஏற்படுவதைக் கண்டு வியந்தான். அந்தச் சிறு குழந்தையின் ஸ்பஷ்டமான உச்சாரணத்தையும், வாக் விசேஷத்தையும் கண்டு, அந்த இடையன் மிக ஆச்சரியமுற்ருன். "இந்த அதிசயமான குழந்தை நம்மிடம் தங்காது. யாராவது முனிபுங்கவரோ, அல்லது தேவதா ஸ்திரீயோ வந்து இதை வாங்கிக்கொண்டு, சென்று விடுவார்கள்". என்பது அவன் நம்பிக்கை.

அந்த நம்பிக்கை வீண்போகவில்லை குழந்தை ஐந்தாவது பிராயத்தை அடைந்தபொழுது, ஒரு நாள் பாறையொன்றில் அமர்ந்துகொண்டு இயற்கையன்னையின் எழி ...ருகிக்கொண்டு, சிந்தனையி... ...திருந்தது. அப்பொழுது அ... ...சென்ற ஒரு மஹரிஷி, ஏகாந்தத்தில் லயித்திருக்கும் இந்தப் பால யோகீச்வரன் யார்?" என்ற வியப்புடன் அந்தக் குழந்தையை நெருங்கினர். அந்தக் குழந்தை உடனே எழுந்து, ரிஷிபுங்கவருக்கு ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து, "ப்ரஹ்மஸுநோ! நமாம் யஹம்" என்று சொல்லிற்று. ரிஷி குழந்தையின் ஸ்பஷ்டமான கவிஸூக்திபோன்ற வார்த்தையைக் கேட்டு, ஆச்சர்யத்தினல் ஸ்தம்பித்துப் போனர். "என்ன விசித்திரம்! இது சாதாரணக்குழந்தையல்ல. தேவதாம்சம் பொருந்தியது!" என்று சொல்லிக் குழந்தையை வாரியணைத்துக் கொண்டார். குழந்தையைத் தூக்கிக்கொண்டு இடையன் குடிசையை அடைந்தார்.

"மஹரிஷியே! எனக்கு முன்பே தெரியும். என்ருவது ஒருநாள் தங்கள் போன்ற யோகீச்வரர் யாராவது வந்து அவனையழைத்துச் சென்றுவிடுவார் என்று எனக்கு முன்பேதெரியும். உயர்ந்த ரத்னத்தை வைத்துக்கொண்டு என்போன்ற மூடன் என்னசெய்ய முடியும்?..." என்று கூறிக் குழந்தையை ரிஷியிடம் ஒப்புவித்தான் அடமானம் வைத்த பொருளைத் திருப்பியளிக்கும் உத்தமவியாபாரி போல. குழந்தை சென்றதும், குடிசை தணல் இல்லாத கணப்புச் சட்டிபோல சோபையற்றுப் போயிற்று.



மஹரிஷியோடு குழந்தை அவருடைய ஆச்ரமத்திற்குச் சென்ருன். புனிதமான ஆச்ரம பூமியை மிதித்தபோது, அந்தக் குழந்தையின் சரீரத்தில் மயிர்க்கூச்சிட்டது. பூமியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு ரத்தினத்தைப்போன்று அக்குழந்தைக்கு வேண்டிய ஸம்ஸ்காரங்களைச் செய்து, காளிதாஸன் என்றுபெயர் சூட்டினர். ஞானம் நிறைந்த அக்குழந்தைக்கு மஹரிஷி வித்தைகள் புகட்

டினர். அவையெல்லாம் சரத்காலத்தில் கங்கா தீரத்தை யடையும் ஹம்ஸபக்ஷிகள் போல காளிதாஸனை யடைந்தன. வேதங்களிலும், இதிஹாஸங்களிலும் குமாரன் காளிதாஸன் மிகுந்த தேர்ச்சிபெற்று விட்டான். உபநயன கர்மா முடிந்த பிறகு அவன் சரீரங்கொண்ட பிரதமாச்ரமம் போல விளங்கினான்.

காளிதாஸன் மஹரிஷி மூலமாக மகாபாரதம் முழுவதையும் பாடங் கேட்டான். மகாபாரதத்தில் துர்வாஸரைப்பற்றிய வரலாறுகள் வரும்போதெல்லாம் அவன் மனம் ஒரு விதமான விகாரத்தையடைந்தது. துர்வாஸரைப் பற்றிச் சொல்லும் சம்பவங்களையெல்லாம் தானும் எங்கேயோ, எப்பொழுதோ அனுபவித்திருப்பதாக அவன் எண்ணினான். ஆனால் தேவதா ரஹஸ்யம் அந்தச் சிறுவனுக்கு எங்கே தெரியப்போகிறது?

குணேச்வர மஹரிஷியின் ஆச்ரமத்தில் காளிதாஸனுக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் சார்ங்காவனும், சாரத்வதனும் முக்கியமானவர்கள். ஆச்ரமத்துப் பெண் குழந்தைகளைக் காணும்போது, தன்னுள் கவிதாஸந்தம் ஏற்படுவதை அவன் உணர்ந்தான். ஆச்ரமத்துப் பெண்களின் பேச்சிலேயும், நடையிலேயும் ஏதோ ஒரு தெய்வீக சக்தி இருக்கிறதென்று அவன் பரிபூர்ணமாக நம்பினான். அவர்களுடைய சரிதங்கள் அவனுடைய கற்பனைக்கு அழகிய விஷயங்களைக்கொடுத்தன. பசுமை மரங்களும், சலசலவென்ற சப்தத்தோடு ஓடும் புனல்களும், பனிமூடிய மலையுச்சியும் மேகங்கள் சூழ்ந்த வானமும் அவனுக்குப் பிரியத்தைக்கொடுக்கும்காட்சிகள்.

"அந்த அழகான விஷயங்களைக் கொண்டு நான் உலகோர் மெச்சக் காவியங்கள் புனைவேன்' என்று தன் அந்தரங்கத்தில் ஒரு சங்கல்பம் செய்து கொண்டான் காளிதாஸன்.

ஒரு நாள் குணேச்வர மஹரிஷி தியானத்தில் ஆழ்ந்திருந்தபொழுது "குரு தேவ! குரு தேவ!" என்று அழைத்துக்கொண்டு ஓடிவந்தான் சாரத்வதன். குணேச்வரன் அனுமதி "ஸ்வாமி! சற்று நேரத்திற்கு முன்னால் ஏடும், எழுத்தாணியும் எடுத்துக்கொண்டு காளிதாஸன் ஓடைக்கரைக்குச் சென்றான். இப்பொழுது நான் சென்றபோது, ஒரு காவியம் இயற்றிருப்பதைக் கண்டேன்! ருதுஸம்ஹாரம் என்ற பெயரில்! ஆனால்......" ஆனால் என்று சொல்லி நிறுத்தினான்.

"சாரத்வத! ஏன் தயங்குகிறாய்? அந்த காவியத்திற்குள் என்ன?" என்றார் குணேச்வரர்.

"... அதில் சிருங்காரரஸம் அதிகமாக இருக்கிறது. தங்களைப் போன்ற யோகீச்வரர்கள் அதை வெறுப்பார்கள்"

"காளிதாஸனை அந்தக் காவியத்துடன் உடனேயே இங்கு வரச் சொல்' என்று ஆக்ஞையிட்டார் குணேச்வரர்.

குணேச்வர மஹரிஷி அந்த காவ்யத்தைத் தனிமையில் படித்துப் பார்த்தார். 'வாசஸ்பதியின் அம்சம் இந்தக்குழந்தை. இத்தனை அழகான வாக்கு சாதாரணகாவ்ய ஞானத்தால் ஏற்பட முடியாது. தேவீ, வாகீச்வரி! இந்தக் குழந்தைக்குத் தீர்க்கமான ஆயுளைக் கொடுத்து, அற்புதமான பல காவ்யங்கள் இயற்றக் கிருபை செய்' என்று அந்தரங்கத்தில் சக்தியைப் பிரார்த்தித்தார்.

இவ்விதமாக யோகத்திலும், தபஸ்சரணத்திலும், முனி குமாரர்களோடும், ஹரிண வர்க்கத்தோடும், இயற்கைக் காட்சிகளோடும் காளிதாஸன் இருபதுபிராயங்களை கழித்தான். பெண்மையைப்போற்றிய காளிதாஸன் அதிதீவிர சக்தி உபாஸகனாக இருந்தான். சக்தியின் ஸ்வரூபத்தை எங்கும் கண்டான். பராசக்தியின் திவ்ய நினைவு அவனுடைய எழுத்தாணியை ஸரளமாக ஓடும்படிச் செய்தது.

[அடுத்த இதழில் முடியும்]



புதிய மாதிரியில் ரஸ்தா அமைக்கும் யந்திரமிது. காங்கிரீட் ரோடுபோட இது உதவுகிறது. தண்டவாளத்தில் ஓடியபடியே பல ஆட்களின் வேலையை இது செய்து முடித்து விடுகிறது.





சமீபத்தில் சங்கரநயினார் கோயிலில் ஸ்ரீ சங்கர நாராயணன் ஹரிஜனங்களுக்குத் தரிசனம் தந்தார். ஆண்டவனைத் தரிசித்து திரும்பிய பக்தர்களைக் காட்டும் படம்.



சென்னைக் கார்ப்பொரேஷன் நகரில் புதிதாக நிர்மாணித்துள்ள டென்னிஸ் ஸ்டேடியத்தை கெய்க்வார் மஹாராஜா சமீபத்தில் திறந்துவைத்தார். பரோடா மஹாராணியையும், சென்னை மேயரையும் படத்தில் காணலாம். இ. பி. பி.




## 37

*அன்புள்ள அம்மாவுக்கு அலமு அநேக தண்டம் ஸமர்ப்பித்த விஞ்ஞாபனம்.*

நான் நினைத்தது மாத்திரம் வீணாகவே இல்லை. கிறிஸ்துமஸுக்குச் சரியாய் 'இவர்' படுத்துக்கொண்டுவிட்டாரே. இவரோ ரொம்பவும் தாட்சண்ய ஸ்வபாவம் உடையவர். வீட்டில் வருவார் போவாருக்குக் கேட்க வேண்டியதில்லை. கொஞ்சம் எழுந்து நடமாட சக்தி வந்தால்கூட அவர்களுடன் எங்காவது கிளம்பி விடுவார். மறுபடியும் பெரிய 'படுக்கை' போட்டுவிடுவார். உடம்போடு இவர் படுகிற கஷ்டம் ஒருபுறம் இருக்கட்டும். இந்த மாமியார், நாத்தனார்களின் வாயில் அகப்பட்டுக் கொண்டு கஷ்டப்பட்டுத் தொலைக்கவேண்டுமே" என்று நான் நினைத்தது, அப்படியே நடந்துவிட்டது.

இந்த வருஷம் கிறிஸ்துமஸ் பிரமாதம் போபோ! ஆறு வருஷங்களுக்குப் பிறகு காங்கிரஸ் பொருட்காட்சிசாலை நடைபெறுகிறது. சங்கீதக் கச்சேரிகளுக்கோ கேட்க வேண்டியதில்லை. தியாகராஜரின் நூற்றாண்டு விழாவும் சேர்ந்துகொண்டது. கேட்பானேன் விசேஷத்துக்கு! சங்கீத சபைகள் ஒவ்வொன்றிலும் தினம் இரண்டு, மூன்று கச்சேரிகளுக்குக் குறைவில்லை.

மத்தியானம் மணி மூன்றாக வேண்டியதுதான், பார்க்க வேண்டுமே இந்த ஜனங்கள் 'எக்ஸிபிஷனுக்கும், சங்கீதக் கச்சேரிகளுக்கும் போகும் வேடிக்கையை! ஒரே திருவிழாக் 'கும்பல்'தான். மோட்டார், டிராம்களில் துளி இடம் உண்டா? ஆரம்பத்திலேயே வண்டிகள் நிறைந்துவிடும். பாதி வழியில் காத்திருப்பவர்கள் காத்துக்கொண்டேயிருக்க வேண்டியதுதான். அதிலும் இந்தப்புருஷர்கள் படும் பாடு, பார்க்கப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. நான் ஒரு 'பொம்மனாட்டி' என்பதற்காக இதைச் சொல்லாமல் இருந்து விடமுடியுமா என்ன? திபுதிபுவென்று இந்தப் பெண்டுகள் பஸ்களில் வந்து ஏறுகிறார்களா? ஏற்கனவே அவைகளில் உட்கார்ந்திருக்கும் புருஷர்கள் வருகிற பெண்டுகளுக்கு இடத்தை விட்டுவிட்டு ஒவ்வொருவராக எழுந்து நிற்க ஆரம்பித்து விடுகிறார்கள். மொத்த இடமும் பெண்களின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு விடுகிறது. புருஷர்கள் எல்லோரும் 'வாரை'ப் பிடித்துக் கொண்டு நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்க வேண்டியதுதான். அதிலும் இந்தப் பெண்டுகள் அடியோடு இரக்கமென்பதே இல்லாதவர்களென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. பாவம் அவர்கள்தான் தாட்சண்யத்துக்கு எழுந்திருக்கிறார்கள். குழந்தைகளையாவது, தங்கள் மடியில் உட்கார வைத்துக்கொள்ளலாமோ; அதுகூடக் கிடையாது.

அத்துடன் இன்னொரு விஷயம் கேட்டாயா? வர வர தேசத்தில் பெண்கள் எவ்வளவு முற்போக்கு அடைந்திருக்கிறார்கள் என்பது இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் தெரிகிறது. ஒரு டிராமாவோ, சினிமாவோ, சங்கீதக் கச்சேரியோ எதையாவது எடுத்துக்கொள்ளேன். அங்கு வருகிறவர்களின் எண்ணிக்கைக்கு பெண்டுகள் இரண்டு பங்கும், ஆண்கள் ஒரு பங்குமாகத்தான் இருக்கிறார்கள். அவ்வளவென்ன? எக்ஸிபிஷனை எடுத்துக்கொள்ளேன். அதைப் பார்க்க வருகிறவர்களில் முக்கால்வாசி பெண்கள்தான். முன்பெல்லாம் கொட்டகைகளில் ஸ்திரீகளுக்கென்று ஒரு மூலையில் சிறிது இடம் ஒதுக்கி இருப்பார்கள். இப்பொழுது பார் கொட்டகை முழுவதும் ஸ்திரீகள்தான். எதற்காகச் சொல்ல வந்தேனென்றால், பஸ்களிலும், டிராம்களிலும் இந்தப் புருஷர்கள் படும் திண்டாட்டத்தைப் பார்த்தால், 'சிரோமணி' சொல்கிறமாதிரி ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி பாடசாலைகள் இருக்கிறமாதிரி இவர்களுக்காகத் தனி வண்டிகளும் விட்டால் பரவாயில்லை என்றுதான் தோன்றுகிறது, அதிலும் இந்த மாதிரியான விசேஷ காலங்களி[illegible]ப்பவும் அவசியமானதுதான்.

அதெப்படியாவது போகட்டும். 'இவருக்கு' உடம்பு கொஞ்சம் குணமாய் இருந்தது. கிறிஸ்துமஸுக்காக கோபு, விமலா, இந்திரா எல்லோரும் வந்திருந்தார்கள். அன்று எக்ஸிபிஷனுக்குப் போக வேண்டுமென்று ஏற்பாடாயிற்று, நான் இவருடன் சொன்னேன். 'நீங்கள் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டாம் நானும் போகவில்லை. பிழைத்திருந்தால் அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ளலாம் அவர் போய்வரட்டும்' என்று. ஆனால் நான் சொன்னதை அவர் கேட்கவில்லை. எல்லாருடனும் என்னையும் அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று ஆசை இருக்குமோவியோ. சரியென்று அதற்குமேல் நான் ஒன்றும் மறுத்துச் சொல்லவில்லை. விமலா, கோபு, சிரோமணி, சௌந்தரம், வாசு, இந்திரா, நான், 'இவர்' எல்லோருமாக எக்ஸிபிஷனுக்குப் புறப்பட்டோம். பெரிய நாத்தனாரைக் கூப்பிட்டோம். வரவில்லை. நாங்களெல்லோரும் ஒரு கோஷ்டியாம்; அந்தப் பெருமை அவருக்கு. சரி, வராவிட்டால் நல்லதாயிற்று என்று நாங்கள் போனோம்.

உண்மையிலேயே 'எக்ஸிபிஷன்' அவசியம் எல்லோரும் பார்க்கத்தக்கதுதான். இந்தக் கடைகளைப்பற்றிய வரையில் இவைகள் தினமும் பட்டினத்தில் பார்ப்பதுதான். காந்திஜியின் நிர்மாண திட்டத்தை விளக்கும் ஸ்டாலும், சர்க்காவில் 200-ம் நம்பர் நூல் நூற்றுக் காட்டும் 'அந்தத் தாதாவினுடைய' ஸ்டாலும், தண்ணீரில் மிதக்க விடப்பட்டிருக்கும் 'மாதிரிக்கப்பலும்,' சிகப்புக் கல்லில் செய்யப்பட்டுள்ள அந்தச் சிறிய கிருஷ்ண விக்கிரகமும் அவசியம் பார்க்க வேண்டியவைதான். எல்லா ஸ்டால்களையும் ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே வந்தோம். 'அதோ பார்த்தாயா மன்னி?' என்று சௌந்தரம் ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டினாள். வயது 22 அல்லது 23 இருக்கும். தணிச்சலான உடம்பு. செக்கச் செவேரென்று மூக்கும், முழியும் எடுப்பாக ராஜாத்தி மாதிரி இருந்தாள். மூக்கிலோ, காதிலோ, கழுத்திலோ, கையிலோ ஒரு நகையா, நட்டா ஒன்றும் கிடையாது. ரிஸ்ட்வாட்ச்கூட இல்லை, போயேன். இத்தனைக்கும் ஒரு பணக்கார இடத்தைச் சேர்ந்தவள்போலிருக்கிறது. பக்கத்திலே ஆம்படையான் 'புல் சூட்டுடன்' நின்றுகொண்டிருக்கிறான். 'இதென்ன மன்னி?' என்றாள் சௌந்தரம். 'இது தான் நாகரிகம்' என்றேன் நான். 'இந்த மாதிரி நாகரிகம் எவ்வளவு வந்தாலும் பரவாயில்லையே. புருஷர்கள் பிழைத்துவிடுவார்களே. நகைக்காகக் காலணா செலவில்லை பார்' என்றது சிரோமணி. உண்மையிலேயே இப்பொழுதெல்லாம் இதுதான் நாகரிகம். 'ஆனால் இதனால் பணம் மிகுந்துவிடும் என்று நினைக்காதே. இதற்கு பத்துப் பங்காக வேறு வழிகளில் காசைக் கரியாக்கிக் கொண்டிருப்பார்கள். நகையாக இருந்தாலும், பணத்துக்கு அழிவில்லாமலாவது இருக்குமே!' என்றார் 'இவர்.'



"........ராஜாத்தி மாதிரி இருந்தாள்........."

அது மாத்திரம் உண்மைதான்-சிமட்டியினுலேயே வீடுகள் கட்டுகிறமாதிரி, மரச் சாமான்களால் கட்டிய வீடாக இருந்தால், வீடு இடிந்து விழுந்தாலும், மரச் சாமான்களாவது மிகுதியாக நிற்கும். இந்தச் சிமட்டியினுலேயே கட்டப்பட்ட வீடுகள், 'வெடிக்க ஆரம்பித்தால்' அதில் போட்ட பணம் 'கிருஷ்ணார்ப்பணந்தான்!' அதாவது அப்பா சொல்கிற மாதிரி, நீடித்த யோசனை கிடையாது. அன்றைய பொழுது கழிந்தால் போதும்' என்ற ரீதியில்தான் ஜனங்களின் மனோபாவம் இருக்கிறது. நான் முக்கியமாய்ச் சொல்ல வந்ததை மறந்து விட்டேனே. எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தோம். நான் நினைத்தமாதிரியே ஆத்துக்கு வந்து சேர்ந்ததுமே இவருக்குக் குளிரும், ஜுரமும் வந்துவிட்டது. வெறும் வாயை மெல்கிற அம்மையாருக்கு அவலும் அகப்பட்டுவிட்டால் கேட்க வேண்டுமா? ஆமாண்டா அப்பா! நாங்கள் சொன்னால் கேட்பாயா? இதோ வந்துவிட்டது உடம்புக்கு. யார் படுகிறது? என்றார் மாமியார். "யார் படுவார்கள்? நாம்தான் இருக்கிறோமே. அந்த தைரியம்தான். இல்லாவிட்டால் பிழைத்தது புனர்ஜன்மம் என்று படுத்து எழுந்தவன், 'எக்ஸிபிஷனுக்குப்' போய் வருகிறானே, எவ்வளவு 'கெட்டிக்காரனாக' இருக்க வேண்டும்? ஷட்டகனும், மைத்துனியும் வந்து கூப்பிட்டுவிட்டால்தான் என்ன? அந்த வார்த்தையைத் துளிகூட மீறக்கூடாதா? 'அவள்' தானுகட்டும் அறியாதவளா? வயது ஆகவில்லை? இந்த உடம்பில், எக்ஸிபிஷன் பார்க்காமல் எந்த மூலையில் குறைவாக இருக்கிறதென்று கொஞ்சம் யோசித்துப் பார்க்கத் தோன்றுதோ? பத்மஜாவினுடைய அம்மா நேற்றே என்னிடம் சொன்னாள். இருந்தாலும் இவன் அவ்வளவு முட்டாளாகவா இருந்து விடுவான் என்று எண்ணினேன். நான் எண்ணியது ரொம்ப பிசகு என்பது இப்பொழுதல்லவோ தெரிகிறது? என்றார் நாத்தனார். அதெல்லாம் எப்படியாவது போகிறது. இந்த சௌந்தரத்தைப் பாரேன். இப்படிப்பட்ட இருள் மூடமாக இருக்குமோ! எப்பொழுது பார்த்தாலும் அவர்கள் வாலைப் பிடித்துக் கொண்டலைகிறதே" என்றார் மாமியார். நல்ல வேளையாக சௌந்தரம், இந்த வார்த்தையை மாமியார் சொல்லும் போது, அங்கே இல்லை, தோட்டத்துப் பக்கம் போயிருந்தது. அப்பொழுது அது அங்கே இருந்திருந்தால் சரியானபடி 'பல்மேல் போட்டு'ப் பெரிய சண்டையைக் கிளப்பிவிட்டிருக்கும்.

இதெல்லாம் எப்படியாவது போகட்டும். இந்த பத்மஜாவினுடைய அம்மாவைப் பார்த்தாயா? பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பார்களே அதே மாதிரி அவள் செய்திருக்கிற வேலை? அடியம்மா பலே கைக்காரி. அதோ அவர் கூப்பிடுகிறார். மற்றவை அடுத்த கடிதத்தில்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள,

அலமு.


எங்கள் பொங்கல் வாழ்த்துகள்!

லக்ஷ்மி நாராயண டிரேடிங் கம்பெனி, ஈரோடு.

Regd. 3003

L.N.T.CO.

BIAS BINDING

ORIGINAL.

600 GOLDEN SWAN BRAND

WIDTH ½ INCH 6 YDS

COLOUR GUARANTEED

LAKSHMINARAYANA TRADING CO.

MADE IN BRITISH EMPIRE

ரிஜிஸ்டர்ட் நெ. 3003

தயாரிக்கும் பொருள்களாவன. L. N. T. கம்பெனி ஸ்வான் பிருண்டு. பயாஸ் பைண்டிங், கோல்டன் ஸ்வான் பயாஸ் பைண்டிங், சாவி பிருண்டு பயாஸ் பைண்டிங்.

டி. எம். ராஜு
&
எம். ஏ. நாராயணசாமி
புரொப்ரைட்டர்கள்

Regd.

SWAN BRAND

BIAS BINDING

600

TRADE

WIDTH ½ INCH 6 YDS

MADE IN INDIA

FAST COLOUR GUARANTEED

கமிஷன் ஏஜன்டுகள் தேவை




# மாப்பிள்ளைத் தோழன்!

ஸ்ரீ ய. மகாலிங்கசாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.

## 12

சேஷு புதிய சேஷுவாய் "டிரஸ்" பண்ணிக்கொண்டிருந்தான். அரையில் சேலம் பட்டுக்கரை வேஷ்டி, மேலே ஸில்கு ஜிப்பாவுடன் ஜரிகை விசிறி மடிப்பு அங்கவஸ்திரம், "ரிஸ்டு வாட்சு" "கூலிங் கிளாஸ்" பௌண்டன் பேனா, "கர்ச்சீப்" "மணிபர்ஸ்" காலில் ஸ்லிப்பர், சீவி விட்டுப் பளபளவெனத் திகழும் கிராப், அலங்காரத்திற்கேற்ற உய்யாரம், உய்யாரத்திற்கேற்ற குரல், நடை, இவைகள் சேஷுவை மாப்பிள்ளை தோரணையில் நன்கு புதுப்பித்துவிட்டன. அவன் உள்ளே வந்ததும் ஸாம்பசிவ அய்யர் இன்னது சொல்வதென்று புரியாமல் சற்று திகைத்தார். அதற்குள் சேஷுவே கலகலப்பாய்—"நேற்று வந்திருந்தேன் நீங்கள்—" என்று ஆரம்பித்தான். அவன் பேசும்போது "கோட்டு" போட்டுக்கொண்டிருக்கும் ஞாபகமாய்க் கைகள் கோட்டுப்பைகள் இருக்க வேண்டிய இடத்திற்குக் குறுகிச் சென்றன. மாமனாரிடம் மரியாதைக்காக இடுப்பிற்கு மேல் குனிந்தவண்ணம் பேசினான். முகத்தில் சாச்வதப் புன்சிரிப்புத் தவழ்ந்தது.

"இப்படி உட்காரலாமே"என்று ஒரு சிறிய "ப்ளைவுட்" சேரை நகற்றினார் டாக்டர்.

உட்கார்ந்துகொண்டே "இல்லை. அவசரக் காரியமிருக்கிறது. வரப்போக ரிக்ஷா பேசிக்கொண்டு வந்தேன். நேற்று அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. இங்குகூட எழுதியிருப்பாரே?" என்று ஆவலுடன் கேட்டான் சேஷு.

டாக்டர், வார்த்தைகளை இழுத்து இழுத்து மெதுவாய் பதில் சொன்னார்.

"நான் நேற்று ஊரிலில்லை. கடிதம் வந்திருப்பதாய் வீட்டில் சொன்னார்கள். நான் இன்னும் படித்துப் பார்க்கவில்லை'

டாக்டர் கண்கள் தரையில் கிடக்கும் தஞ்சாவூர் கடிதத்தின் பேரில் பாய்ந்தன.

சேஷுவும் அவர் நோக்குவது எது என்று கவனித்தான்.

'இது என் அப்பா எழுத்துப் போலிருக்கிறதே!'

'இருக்கலாம்'

சேஷு கடிதத்தைக் கையில் எடுத்தான்.

'ஆமாம். அப்பாவின் கடிதம் தான். இதை நீங்கள் இன்னும் படித்துப் பார்க்கவேயில்லையாக்கும்!' என்றான் சேஷு சற்று உற்சாகம் குறைந்து ஏமாற்றம் மேலிட்ட குரலில்.

'நான் இப்போதுதான் வந்தேன்' என்றார் டாக்டர் பேசவே சம்மதமில்லாதவர்போல். சேஷுவுக்கு ரத்தம் தலைக்கேறியது.

'ஆனால் இந்தக் கடிதத்தை...'

'நீங்கள் எடுத்துக்கொண்டு போகலாம்'

'உங்களுக்கல்லவா எழுதியிருக்கிறார்?'

'நீங்களே பதில் எழுதிவிடலாம்'

என்ன பதில் எழுதுவது என்று கேட்பது அவசியமில்லை என்று சேஷுவுக்குத் தெளிவாயிற்று. மனுஷ்யன் பேசும் மாதிரியிலிருந்தே பதில் எத்தகையது என்று புரியவில்லையா? சேஷுவுக்கு மேலே பேச இடமில்லை. கடிதத்தை, தான் உட்கார்ந்திருந்த நாற்காலியின் பேரிலே வைத்துவிட்டு எழுந்து, நான் "பிற்பாடு பார்க்கிறேன். அவசர ஜோலியிருக்கிறது. என்று தலை நிமிர்ந்து பார்க்காமல் முணுமுணுத்துக்கொண்டு அவன் வெளியே வந்து ரிக்ஷாவில் ஏறிக் கொண்டான். ரிக்ஷா நகர்ந்தது.

"என்ன? டாக்டர் இப்படி மாறிவிட்டார்! நான் நினைக்கவேயில்லை. மென்னியைப் பிடித்து வெளியில் தள்ளுவதற்கும், இந்த வார்த்தைகளுக்கும் என்ன வித்யாசம்? தானாக வலுவில் அங்கு போனது மதிமோசமாகவல்லவா ஆகிவிட்டது! எந்தப்புற்றில் எந்தப்பாம்பு இருக்கிறதோ என்ற வசனத்தின் உண்மை இன்றல்லவா தெரிகிறது! என் தகப்பனார் கடிதம் இந்த அவமானப்பட வேண்டுமா? பணம் காசு விஷயம் ஏதாவது இருக்கும்போலிருக்கிறது. அதனால்தான் இவ்வளவு வெறுப்பு டாக்டருக்கு ஏற்பட்டு விட்டது. சரி. அம்பு இனி எனக் இல்லை. ஆமாம். டாக்டர் ஏன் நேரிட உண்மையைப் பேசக் கூடாது? மறைமுகமாக உதாசீன பூர்வமான இந்தக் கொடிய சம்பாஷணை முறை எதற்கு? மனுஷ்யன் ரொம்ப துஷ்டன்! இவன் சம்பந்தம் ஏற்படாதது நல்லதுதான். ஆனால் அம்புவின் தூண்டுதலாயிருக்குமோ? அம்புவுக்கு ஆதி முதலே என்னிடம் பிடித்தமில்லை என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. சரிதான். விஷயம் புரிந்தது! அவர்களுக்கு வேறு வரன் கிடைத்து விட்டால்போலிருக்கிறது! கல்யாணத்தின் சம்சாரம் தவறிப்போய் விட்டாளல்லவா? தெய்வசங்கல்பம் எனக்கு விரோதமாயிருக்கிறது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டாம். கல்யாணம் துணிந்து எனக்குத்துரோகம் செய்வானா? ஆனால் துரோகம் என்ன? எனக்கு இல்லை என்றால் எக்கேடு கெட்டுப்போனால்என்ன? ஆனால் அம்பு இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? ஐயோ! தலை சுற்றுகிறதே. எனக்கு ஏதோ விபரீத காலம் தான் வந்திருக்கிறது. கல்யாணம் மட்டும் அவளை மணம் புரியச் சம்மதிக்கட்டும், அப்புறம் பார்த்துக்கொள்கிறேன். ஏன் அவன் சம்மதிக்கமாட்டான்? நரிக்குப் பயந்து புலி தன் ஆகாரத்தை விட்டு விடுமா? என்றால் என்ன செய்ய முடியும்? கல்யாணம் தீர்மானித்தால் எந்தக் காரியத்தையும் செய்துமுடிப்பான். என்னை

எதற்காக அவன் கேட்கப்போகிருன்? விவாகம் என்பது கொடுப்பவர், வாங்கிக்கொள்ளுபவர் இருவருடைய சம்மதத்தையும்பொருத்தது. பெண்ணைப் பெற்றவருக்கோ, பெண்ணுக்கோ யோசனைகள் வேறு விதமிருக்க நான் பாதிக் கல்யாணம் முடிந்ததென்று மனப்பால் குடிக்கும் மடையனுகிவிட்டேனே! ஆரம்பத்திலேயே என்னை சனி விக்ஷண்யம் பின் தொடர்ந்து விட்டது. இல்லையேல் பெண் பார்க்கப் போன தினம் கல்யாணத்தை ஏன் நான் அழைத்துச் சென்றிருக்க வேண்டும்? அதற்கு முன் டாக்டர் குடும்பத்திற்கு கல்யாணம் அறிமுகமானவன் என்று தோன்றவில்லை. என் புண்ணியத்தால் இரு குடும்பங்களும் இப்போது பந்து முறையில் பழகி வருவதாய்த் தெரிகிறது. நானல்லவா, மாப்பிள்ளைத் தோழனுகிவிட்டேன்! கல்யாணமும் மறுபடி வரனுகிவிட்டான். அவன் என்னைவிட இரண்டு மூன்று வயதுதான் பெரியவன். "இளையாள்" என்று சொல்வதற்கே இல்லை. அம்புஜம் அவனுடைய போட்டோப் படத்தை ஆவலுடன் எடுத்து வைத்துக்கொண்டிருந்ததிலிருந்தே தெரியவில்லையா? ஐயோ! அம்புஜத்தைப் பறி கொடுத்து விட்டு உயிர்வாழ்வேனு? கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ? ஆனால் கல்யாணத்தின் மனப்போக்கு களங்கமற்றதாயிருக்கும் என்றுதான் இன்னமும் என் அந்தராத்மா நம்புகிறது. அவன் சிதம்பரத்திலிருந்து வந்ததும் அவனைப் பார்ப்பதா, இல்லையா? துக்க பிரச்னம் செய்யாமலிருப்பது நியாயமா! பத்து வருஷங்களாய் அண்ணன் தம்பிகளைப்போல் பழகி விட்டோம். பார்க்காமலிருக்க முடியுமோ? அவனிடத்தில் என்ன தப்பு இருக்கிறது? இதுவரையில் ஒரு குற்றம் குறை என்று விரல் மடக்கமுடியுமா? அம்பு எங்கள் நட்பைக் கெடுத்து என்னையும் துறவியாக்கிவிட உதித்த ஒரு ஈச்வர மாயை என்றல்லவா தோன்றுகிறது! இந்த மாயை என்னைப் பலமாக ஆட்டி வைத்து என் வாழ்க்கையைப் பாழாக அடித்துவிடும் போலிருக்கிறதே. ஐயோ தெய்வமே! இப்படித்தானு என் தலையில் எழுதியிருக்கிறது?...' வீடு செல்ல மனமில்லாமல் ரிக்ஷாகாரனை அனுப்பிவிட்டு சமுத்திரகரைக்குச் சென்முன் சேஷு.

## 13

"கிட்டாதாயின் வெட்டென மற" என்முள் ஔவைப்பாட்டி. மறக்க முடிந்தால் நல்லதுதான், சுகமுண்டு. ஆனால் அனுபவத்தில் இது சாத்தியமான காரியமல்ல. அணை போட்ட ஆறு பொங்குவது போல் இச்சைப்பட்ட விஷயத்தில் இடையூறுகள் குறுக்கிடக் குறுக்கிட மனோவேகம் அதிகரிக்கிறது. வரம்புகளை தாண்டப் பார்க்கிறது, அணைகளை உடைக்க முயலுகிறது. கிட்டாததை மறக்க முடியாமல் மனிதன் படும் அவஸ்தை சொல்லவொண்ணுது. பீச்சுக்கரையில் யோசனைகள் செய்து சில தீர்மானங்களுடன் வெடிக்கப்போகும் "பாம்" போல் தன் ரூமை அடைந்தான் சேஷு.

அவன் ஆத்திரத்தைத் தாங்கக் காகிதமே பொறுப்பேர்க்கவேண்டியதாயிற்று. எதிர்க்கும் கருவியான பேனவைக் கையிலேந்திஞன். பேனு முனை பாணம்போல் சீரியது. ஆங்கிலத்தில் எழுதினுல் "க்ஷேமம்" "நமஸ்காரம்" என்ற தலைப்புகள் வேண்டாமல்லவா?

"என் அருமைத் தந்தையே!"— என்று ஆரம்பித்தான். 'அருமை' என்ற வார்த்தை ஆங்கிலத்தில் அதிக உபயோகத்தால் அர்த்தம் தேய்ந்துபோன ஒரு வீண் சொல். தகப்பனுரின் பறிமுதல் மனோபாவத்தால்தான் டாக்டர் நெஞ்சு கல்நெஞ்சாகி விட்டது என்று சேஷு நிர்ணயித்துக்கொண்டான்.

"என் விவாஹ விஷயமாக உங்கள் பொறுப்பை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பணத்தைக் கொண்டு பெண்ணை விரும்புவது என்பது காதல் சூத்திரங்களில் காணுத தத்துவம். பெண்ணைத் தேர்ந்தெடுப்பது விவாஹம் செய்துகொள்ளுபவனின் பொறுப்பு. பணத்திற்கும், உண்மை அன்பிற்கும் தொடர்பு கிடையாது. பணத் தூண்டுதலால் ஒரு பெண்ணைக் காதலிப்பதுஎன்பதாவது, பணமின்மையையொட்டி ஒரு பெண்ணைக் காதலிக்கத் தகாதவன் என்று கருதுவதாவது காதலர்களின் அனுபவ சரித்திரங்களில் நாளது வரையில் காணுத விஷயம். காதல் "ஆர்டர்" மூலம் தருவித்துக் கொள்ளும் பதார்த்தமல்ல.



..."இப்படி உட்காரலாமே" என்று ஒரு சிறிய "ப்ளைவுட்" நாற்காலியை நகர்த்தினர் டாக்டர்....



மூத்தோர் சொல் என்று பணிந்து பரிகரிக்கவல்ல பாசமல்ல. அது ஒரு ஆத்ம உணர்ச்சி. வார்ப்பில் அமைக்கப்பெற்ற பூங்கொடி கண்ணுடியை உடைத்துப் பொடி செய்தால்தான் மறையும். அது போன்றது காதல் உள்ளம். அதைப் படைக்கப் பெருதவர்கள் அதன் உண்மையை அறியமாட்டார்கள். பிரகிருதிக்கு விரோதமான கட்டுப்பாடுகளினுல் துன்புறுத்தும் அளவிற்குத் தகப்பன் புத்திரர்களைப் பணியச் செய்யும் காலம் மலையேறிவிட்டது. நான் இந்த விஷயத்தில் உறுதியுடையவனுயிருக்கிறேன். டாக்டர் அவர்களின் நல்ல மனதைச் சம்பாதித்துக்கொண்டு அவர் பெண்ணை நான் மணக்கும்படி செய்வித்தால் உங்களிடம் நன்றி பாராட்டுவேன். உங்களுக்கு அது சாத்தியமல்லவென்முல், நான் என் சுயேச்சைப் படி ஏற்பாடுகள் செய்துகொள்ள நேரிடும். பிற்பாடு வீணுக என்னைப் பழி கூறிப் பயனில்லை. இந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்ற எவ்விதத்திலும் தங்கள் மனம் கோணுமல் நடக்க பக்தி பூர்வமாய் சித்தமாயிருக்கும் தங்கள் அன்புள்ள மைந்தன் ஆர். சேஷாத்ரி"

இந்தக் கடிதம் தபால் பெட்டியில் அன்றே சேர்ந்தது.

இதற்குத் துணையாக டாக்டருக்கு ஒரு கடிதமும் அன்றே தபாலில் சேர்க்கப்பட்டது.

"என் மதிப்பிற்குரிய கண்யரே! என் தகப்பனுருக்கு இன்று லெட்டர் எழுதிவிட்டேன். பண நிர்ப்பந்த மூலமாக யாதொரு இடையூறுமில்லாமலிருப்பதற்கு நான் ஜவாப்தாரி.

இந்த விஷயத்தில் என் தகப்பனுரின் போக்கு எனக்கே லஜ்ஜையையுண்டுபண்ணுகிறது. ஆனல் அவர் தன்னந்தனியே முரட்டு சுபாவமுடையவரல்ல. பேராசையுடையவருமல்ல; தாக்ஷிண்யத்தையே பெரிதாய் நினைப்பவர். நிர்தாக்ஷிண்யமாய் நடந்து கொள்ள முடியாதவர். பணத்தைக் கேட்பது ஈனமென்றும், கொடுப்பது பெருமை என்றும் உணராதவரல்ல. வற்புறுத்தலைவிட விட்டுக் கொடுப்பது, பெருந்தன்மை என்றும் தெரிந்தவர். கூடிய சீக்கிரம் தங்களுக்குத் பதில் வரும் 'நீயே பதில் எழுதலாம்' என்று என்னிடம் தாங்கள் சொன்னதற்கு அபிப்பிராயம் இது



..."சேஷுவுக்காகப் பார்த்த பெண் மரகதம்"...

தானென்றுநினைக்கிறேன். வைத்த முகூர்த்தத்திலேயே விவாஹம் நடப்பது நிச்சயம். தாங்கள் உத்ஸாகத்தைத் தளரவிடவேண்டாம். அப்படி அவர்கள் தணிந்து போகாவிட்டாலும் நான் தங்கள் இணையற்றஅருமைக்குமாரியின்நிமித்தம் ஏழு கடலையும்தாண்ட சித்தமாயிருக்கிறேன் சுற்றத்தார்களையும் துறப்பேன். அவள் என்னைத் துறந்தால் நான் துறவியாவேன் இதுதான் என் மனோநிலைமை. தங்களிடம் நேரிலேயே இவ்வளவும் சொல்லியிருப்பேன் தங்களிடம் நான் வந்த நேரம் தகுதியற்றதாயிருந்தது தாங்கள் ஏதோ மனோவியாகூலத்தால் என்பால் அதிக கவனம் செலுத்த முடியாமலிருந்ததை அறிந்து கொண்டேன். அவ்வித அஸந்தர்ப்பத்தில் தங்களுக்கு மனம் நோகும்படி நான் புகுந்து எதிர்பாராதவிதமாய் நடந்து கொண்டதுபற்றி மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். தங்கள் மனந் தெளிந்தவுடன் தங்களைப் பார்த்து மரியாதை செலுத்தக்காத்திருக்கும் அன்புள்ள ஆர். சேஷாத்திரி"

வஸந்தகாலத்தில் தாமரை தடாகத்தைப்பார்த்த நாம் கார்காலத்தில் அதன் அத்துமீறிய நிலையை ஆச்சர்யத்துடன் பார்க்கிருேம். அமைதியான வானத்தின் கீழ் அழகிய அலைவீச்சுகளுடன் நர்த்தனம் செய்யும் ஸமுத்திரத்தைப் பார்த்த நாம், கடும் புயல் சுழலும் காலத்து அதன் அலை எழுச்சியும், பொங்குதலும், ஆரவாரமும் பயங்கரமாயிருப்பதையும் அறிவோம். மனிதன் பிரகிருதியிலும் ஸமநிலையுள்ள காலத்து அடங்கிக்கிடக்கும் ஹிருதயம் விபரீத விளைவுகளின் தாக்குதலால்கொந்தளிப்படைந்து தத்தளிக்க நேருகிறது. அக்காலத்தில் அதே மனிதன் வார்த்தைகளில் கொதிப்பும், நடவடிக்கைகளில் உறுதியும் தீரமும், தோற்றத்தில் விகாரமுமுள்ள வெறும் பிரகிருதியாக மாறிவிடுகிருன். இதையே தத்துவ ஞானிகள் ஸத்துவ குணத்தை மீறிக் கிளர்ச்சியுண்ட ரஜோ குணத்தின் ஆர்ப்பாட்டம் என்று சொல்லுவார்கள். சேஷுவுக்கு அந்த நிலைமையில் ரஜோகுணம் தாண்டவமாடத் துவக்கியிருந்தது. அவனுடைய அடிப்படையான பிரகிருதியில் தமோ குணப்பூச்சின் உள்புறம் ரஜோகுணத்தின் கனமான ஒரு பத்தையும் அதனுள் ஸூக்ஷ்மமான ஸத்துவ குணத்தின் வித்தும் அமைக்கப்பெற்றிருந்தது. சேஷுவின் மேற்கண்ட சரித்திரப் பகுதியின் அதிர்ச்சிகளால் லேசான தமோமூட்டம் நீங்கியதால் அடுத்த அடுக்கில் உள்ள ரஜோ குணம் எரிமலையின் அக்னி வெள்ளத்தைப்போல் பீறிட்டு வெளியில் வீசலாயிற்று. மேற்கண்ட கடிதங்கள் எழுதியபின், இரண்டு மூன்று தினங்கள் வரை சேஷு பித்துப் பிடித்தவன்போல் அமைதியற்ற மனதுடன் அலைந்து திரிந்துகொண்டிருந்தான். அவன் அதுவரையில் தகப்பனுருக்குஇந்த மாதிரி தொனியில் கடிதம் எழுதியது கிடையாது. தன்னை உதாசீனம் செய்தவர்களிடத்தில், டாக்டரிடம் அந்தக் கடிதத்தில் காட்டியதுபோல், பணிவும் காட்டியது கிடையாது. காதலைப்பற்றி சாஸ்திரம் படித்ததும் கிடையாது. இதற்கெல்லாம் காரணம் அம்பு. அவளுடைய ஒரு அரைப் பார்வையால் ஒரு சாஸ்திரத்தில் பூராவாக விற்பன்னனுகிவிட்டான் சேஷு. அம்பு அவன் பிராணன்களுடன் பிணைக்கப்பட்டுப் போய்விட்டாள். அவளைப் பிரித்தால் பிராணனைப் பிரிக்கும் அவஸ்தைக்கு ஆளாகி விடுவான்போல் ஒரு உணர்ச்சி அவனுக்கு இருந்தது. ஆனாலும் தான் எழுதிய வாசகங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்ட அவனுக்கு ஒவ்வொரு சமயம் அச்சமும், லஜ்ஜையும் மனதைப் பாதிக்காமலிருக்கவில்லை, டாக்டர் உண்மையில் தன்னிடம் உதாசீன பாவனையுடையவராயிருந்தால், இந்தக் கடிதத்தில்

கண்ட சரணாகதி தனக்கு எவ்வளவு அவமானத்தைத் தரக்கூடியது என்று நினைக்கும்போது அவன் மிகவும் தன்னை வெறுத்துக் கொண்டான். தகப்பனாருக்குக் காதல் வேதாந்தம் எழுதியது பற்றி அவனுக்கு ஏற்பட்ட பச்சாத்தாபத்திற்கு அளவில்லை. தகப்பன் பிள்ளை என்ற அறுதியான தர்ம நிலையை ஒரு முட்டாள்தனமான அடியில் தகர்த்துவிட்டேனே என்று மனம் நொந்தான். வெட்கிப்போனான். இனி டாக்டரையாவது தகப்பனாரையாவது எப்படிப் பார்ப்பது என குழப்பமடைந்தான். அந்த இரண்டு மூன்று தினங்களில் சேஷு பழக்கப்பட்ட காரியங்களிலும் அசட்டையாகவிருந்தான். துணி தோய்ப்பதில்லை. ஸோப்பைத் தேய்த்து நன்றாய் குளிப்பதில்லை. வேளைகளை ஞாபகப்படுத்திக்கொண்டு சாப்பாட்டிற்கோ டிபனுக்கோ விரும்பிச் செல்வதில்லை. இரவு சரியாய் தூங்குவதில்லை. நண்பர்களை நாடுவதில்லை. வந்தவர்களுடனும் ருசியுடன் வார்த்தையாடுவதில்லை. கண்காட்சிகளுக்குப் போவதில்லை. சமுத்திர கோஷத்தின் பேரிரைச்சலில் தன் ஹிருதயத்தின் சலசலப்பை அமுக்க நினைத்தவன் போல், பீச்சுக்கரையின் ஏகாந்தத்தையே விரும்பினான். ஆபீஸில் ஒரே தடுமாற்றம். நடுவில் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்ததால் பெரிய ஆச்வாசமடைந்தான்.

அன்று சற்று முன்னதாகவே பீச்சுக்கு நடக்கத் தலைப்பட்ட அவன் எதிரே டாக்டர் ஸாம்பசிவய்யர் கார் தென்பட்டது. தன் கடிதத்தின் நற்பயன் யாதேனும் தெரியலாமென்று அவன் புத்தி சபலப்பட்டது. டாக்டர் தானே செலுத்திக்கொண்டு வந்த காரின் கைப்பிடிப் பைச் சக்கிரத்தையும் ஒரே கண்களின் திருஷ்டியையும் க்ஷணத்தில் மறு பக்கம் திரும்பிக்கொண்டு விரைவில் மறைந்தார். சேஷு "செட்" என்றான், "அல்ப மனிதன்" என்றான். மூன்றுவதாக. "நான் எவ்வளவு முட்டாள்" என்று வெறுத்துக்கொண்டான். அவன் டாக்டருக்கு எழுதிய ஒவ்வொரு வாசகமும் அவன் நினைவில் எழுந்து அவனை ஊசி போல் குத்திப் புண்படுத்தியது. மனுஷ்யனின் சுபாவம் தெரியாமல் அல்லவா அவனைப்பெருமைப் படுத்தி என்னைத்தாழ்வு படுத்துக் கொண்டேன். என் வெறி என்னை விட்டகல என்ன உபாயம் செய்வேன்? ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ரோமியோவின் நிலைமையை ஒத்திருக்கிறது என்னலாம். ஆனால் அம்புஜ எலியட்டைப்போல என்னிடம் ஈடுபட்டவள் என்று நிச்சயமிருந்தாலும் ஒருவிதமான ஆச்வாஸத்திற்கு இடமிருக்கும். அவ்வளவிற்குக் கொடுத்துவைத்தவன் நான் என்று தோன்றவில்லையே.' ரோட்டில் பிரக்ஞையற்றவன் போல் நடந்துகொண்டிருந்த அவன் பின் ஒரு "ஹார்ன்" அலறியது. சேஷுவின் மனதில் திரண்டு வந்த சிந்தனைப்புகைப்படலங்களை ஒரு பெரும் காற்றுப்போல் அந்த விகார த்வனி ஒதுக்கித்தள்ளிவிட்டது. சேஷு சற்று களைப்பாற்றிக்கொள்ள ஒரு காபி ஹோட்டலில் புகுந்தான்.

மறுநாள் தபாலில் தகப்பனார் அவனுக்கு புது அதிர்ச்சியைக் கொடுக்கும் விருத்தாந்தம் ஒன்றை வரைந்திருந்தார். டாக்டரிடமிருந்து சரியான ஜவாப்பு குறிப்பிட்ட டயத்தில் வராததால், ராமஸ்வாமி அய்யர் ஏற்கனவே பிரஸ்தாபித்துக் கத்தரித்துப்போன மற்றொரு சம்பந்தத்தைப் புனராலோசனை செய்து பிரஸ்தாபங்களை உஜ்ஜீவிக்கச்செய்து, முடிவுக்கு வந்து முன் நிர்ணயிக்கப்பட்ட அந்த வைகாசி 18உ முகூர்த்தத்திலேயே முகூர்த்தம் வைத்து ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவென்றும், சேஷு கடிதம் கண்ட அன்றிரவே யாதொரு ஆக்ஷேபனையும், தவக்கமுமில்லாமல்புறப்பட்டு வரவேண்டுமென்றும், பெண் மிகுந்த லக்ஷணவதியாதலால் டாக்டர் பெண்ணை மறப்பது சுலபமாகி விடும் என்றும், மற்றது நேரில் பேசிக் கொள்ளலாமென்றும், தவறாமல் அவன் புறப்பட்டு வருவதை நம்பி ஏற்பாடுகள் நடக்கின்றனவென்றும், கல்யாண பத்திரிகை அச்சுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டதென்றும், 'அவனுக்கு நன்மையையே அது வரையில் கோரி வந்தவரும், இனியும் கோருபவருமான பெற்றோர்களின் மனதைப் புண்படுத்தாமல் உசிதமான வழியில் நடந்து கொள்வது புத்திசாலிக்கு அடையாளம் என்றும், இன்னும் பல சமாதானங்களும், உபதேசங்களும் அக்கடிதத்தில் அடங்கியிருந்தன.

சேஷு அக்கடிதத்தைப் படித்தவுடன் ஒரு பெருமூச்சு விட்டான். அப்பாவின் பெருந்தன்மை அவன் மனதை இளக்கியது. தன் பிதற்றல்களையும், அடம் நிறைந்த சொற்களையும் அவர் சிறிதும் பாராட்டாமல் அன்பையே அடிப்படையாகக்கொண்டு அனுகூல சிந்தனைகள் ததும்பும் உள்ள முடையவராக விளங்குகிறார். தான் ஒரு முரட்டு வெறியில் அறுத்து விடத் துணிந்தபாசம் அவருடைய தயாளகுணத்தால் மறுபடி தன்னைப் பற்றிக்கொள்வதை அவன் உணர்ந்தான். ஆனாலும் அக்கடிதத்தின் கட்டளையைப் பின்பற்ற சேஷுவுக்கு சாத்தியமாகத் தோன்றவில்லை. அப்பா குறிப்பிட்டிருக்கும் பெண்ணை அவனும் பார்த்திருந்தான். அப்பா அவள் அழகை மிகைப்படுத்துவது காரியவாதியின் ஒரு தந்திரமாக அவனுக்குத் தோன்றியது. அம்புவே ஜாதிக் கமலம்போல் எந்த மரகதத்தையும் மாணிக்கத்தையும் மறக்கச் செய்யத் தகுந்தவள்



அவன் எழுதியது ஒரு வரிதான். அது ஒரு தந்தி. என்னை நீங்கள் எதிர்பார்க்கவேண்டாம்.



என்பதில் ஐயமில்லை. அப்பா தேடுவது பணத்தில் பெருத்தகை என்று சேஷு கண்டுகொண்டான். உலகளந்தவராதலால் அவருடைய நயமான சொற்கள் ஆழ்ந்த மனோபாவங்களை மறைக்கின்றனவோ, என்னவோ? அப்பாவுக்கு மற்றொரு தூண்டுதலுமிருக்கலாம். மரகதத்தின் தகப்பனாருடன் வளர்ப்புப் பிள்ளையாக ஒரு மருமகன் இருந்து வந்தான். அவனுக்கு சேஷுவின் தங்கை காமாக்ஷியை விவாஹம் செய்து கொடுத்து இலகுவாகக் காரியத்தை முடித்துவிடலாமென்றும் ஆலோசிக்கப்பட்டிருக்கலாமென்று அவன் மனதில் பட்டது. காமாட்சிக்கு அந்த வரன் விரும்பத்தக்கதல்லவென்பது சேஷுவின் கருத்து. இந்நிலைமையில் என்ன செய்வதென்பது புரியாமல் சேஷு தத்தளித்தான். ஆனால் காரியம் ஒத்திப்போடக் கூடியதல்ல. ஒரு துண்டுக் கடிதத்தை எடுத்தான் சேஷு. அவனை ஒரு பெரிய தீர்மானம் கப்பிக் கொண்டுவிட்டது. அவன் எழுதியது ஒரு வரிதான். அது ஒரு தந்தி.

"என்னை நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம்." மூலையில் கையெழுத்திட்டான். தபாலாபீஸுக்குத் தந்தியுடன் ஹோட்டல் பையனை அனுப்பிவிட்டு, பஜாரை நோக்கி விரைந்து சென்றான் சேஷு. அங்கு அயல் நாட்டுத் துணிகளைப் பஹிஷ்காரம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தும் தேசியத் தொண்டர் படை கடைக்குக்கடை வழிமறித்துப் பொது ஜனத்திற்கு போதித்துக் கொண்டிருந்தது. வெகுகாலமாக சேஷுவுக்கு இப்படையில் புகுந்து தியாகம் செய்ய வேண்டுமென்ற அவா உண்டு. ஆனால் குடும்ப சிந்தனைகளாலும், கவர்ன்மெண்டு உத்யோகஸ்தரான தகப்பனாரின் எச்சரிக்கைகளுக்கு உள்பட்டும், கல்யாணத்தின் மிதவாதயோசனைகளாலும் தன் ஆர்வத்தை உள்ளடக்கி வைத்திருந்தான். சமீப காலத்தில் தனக்கே, தகப்பனாரின் சலுகையினால் கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் நியமனமாகி விட்டதால், அவன் ராஜீய தீவிர வாதங்களில்பங்கெடுத்துக்கொள்ள வசதியில்லாமல் போய்விட்டது. இப்பொழுதோ தகப்பனாரின் கட்டளைகளும், கல்யாணத்தின் ஹிதோபதேசங்களும் அவனைப் பேடியாக்கப் பலனற்றவை என்று அவன் தெளிந்தான். துணிவுற்றான், தன்னலம் என்பதைத் துறந்தான். வீரச் செயலில் விருப்புற்றான் தியாகமே வாழ்க்கைப்பயன் என்று திடம் கொண்டான்

ஒரு சூறாவளியாய்ச் சுழலும் புயலில் பின் நோக்காது புகுந்தான். தடியடிபட்டுச் சுருண்டு, தெரு நடுவே விழுந்தார், கனல் வீசும் கண்களுடன் திகழும் தொண்டர் படையில் ஒருவனானான். (தொடரும்)


23-வது அகில இந்திய வைத்திய மகாநாடு சென்ற மாதக் கடைசியில் மதுரையில் நடந்தது. நடவடிக்கைகளை ஆரம்பித்துவைத்த ஸர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் இடமிருந்து நாலாவதாக நிற்கிறார். மகாநாட்டுத் தலைவர் காப்டன் முகர்ஜியும், உபசாரணைத் தலைவர் டாக்டர் ராம சுப்பிரமணியமும்கூட இருக்கிறார்கள்

அதிகமாக வேதாந்த மார்க்கத்தில் சித்தவிருத்தி ஈடுபடும். 5-வது இடத்திலுள்ள கெட்ட கிரஹத்தால் அனாவசியமாகக் கவலை ஏற்படும். கோபம் சீக்கிரம் வரும். சில்லரை விஷயங்களில் எல்லாம் கூட மனது வெறுத்துப்போகும். உறவினர் ஒருவருடன் அபிப்ராயபேதம் இம்மாதத்தில் ஏற்படலாம். ஹேஷ்ய பூர்வமாகச் செய்யும் வியாபார இனங்களில் வெற்றியிருக்குமெனச் சொல்வதற்கில்லை. இந்த ராசியில் சிலருக்குத் தூர தேசப்பிரயாணம் ஒன்று நேரலாம். மற்றும் சிலர் விஷயத்தில் வருந்தத்தக்க வதந்திகள் உலவும். பண விஷயமாகப் பழைய உறவினர் ஒருவரிடமோ அல்லது நண்பரிடமோ அபிப்ராயபேதம் ஏற்படலாம். செலவு படு கடுமை. தேக ஆரோக்கியம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிராது. போதிய அளவு தேகாப்பியாசம் செய்து நிலைமையைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். வயிற்றுக் கோளாறோ சிறுநீர் கழிவுபற்றிய சங்கடமோ ஏற்படலாம். இவை ஏற்படாமல் முன்னெச்சரிக்கையோடு இருக்கவேண்டும்.

ஜனவரி 18, 19, 23, பிப்ரவரி 1, 5, 8, 10 தேதிகள் இவர்களுக்கு உத்தம தினங்கள்.

## துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

இம்மாதம் துலாராசிக்காரர்களுக்கு தீவிரமான அலுவல்கள் நிறைந்ததாயிருக்கும். புதிய திட்டங்கள், அபிப்ராயங்கள், அபிலாஷைகள் இவையெல்லாம் சிந்தையில் திரண்டு நிற்கும். பூர்ண உத்வேகம் ஏற்பட்டு அலுவல்களில் முன்னேறிச் செல்ல அடியாக நிற்க நேரும். ஏக காலத்தில் அளவுக்கதிகமான வேலைகளை ஏற்றுக்கொள்ளும் போக்கு ஏற்படுவதுடன், தீவிரமான யோசனையும் கவனமும் செலுத்த முடியாதுபோவதால் சிறந்த சந்தர்ப்பங்களைக் கைநழுவ விடும்படியும் நேரும். பிரயாணம் செய்வதென்பது இம்மாதத்தில் பிரதானமாக விளங்கக்கூடிய அம்சம். எதிர்கால வியாபாரம்பற்றிய திட்டங்கள்பல்வேறுமாறுதல்களுக்குட்படுவதோடு, அவற்றை ஒத்திவைத்துக்கொண்டே போகவும் நேரும். வர்த்தகத்தில் ஏதேனும் எதிர்ப்பிருக்கலாம். முரட்டு அடியாகவில்லாமல் சமரஸ மனோபாவத்துடன் நடந்துகொள்வது இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் யுக்தமாயிருக்கும். வியாபாரிகளாயின், கூட்டாளியாரேனும் ஒருவர் தேவையாயிருந்தால் அனுகூலம் என்ற உணர்ச்சி அடைவார்கள். அம்முயற்சி பலிக்குமானால் கூட்டாளி வயதில் முதியவராயும் அனுபவசாலியாயும் இருப்பார். பண வைபவம் ரொம்ப திருப்திகரமாயிருக்கும். இந்த ராசியில் சிலருக்கு கார் போன்ற புதிய வாஹனப் பிராப்தி கிட்டவும் இடமுண்டு. மற்றும் சிலருக்கு வாசஸ்தல மாற்றம் ஏற்படுமென்று கூறலாம். தூரதேசத்திலுள்ள உறவினர்களிடமிருந்து நல்ல சேதிகள் வரும். பணத்துறையில் எதிர்பாராத வருவாய்க்கு இடம் காண்கிறது.

ஜனவரி 16, 23, 31, பிப்ரவரி 3, 7, 11, தேதிகள் இவர்களுக்கு எடுத்தவை.

## விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய,)

விருச்சிக ராசிக்காரர்களுக்குப் போன மாதத்தைவிட இம்மாதம் பிரகாசமானது. செல்வம் சம்பந்தமான புதிய திட்டங்களை வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள முடியும். இந்த ராசிக்காரர்கள் செய்யும் முயற்சியில் கிட்டிய பந்துக்களின் ஸகாயம் தானாக ஏற்படும். ஏதேனும் ஒரு இனத்தில் திடீரென்று திரவிய லாபம் கிட்டுவதற்கு இடமேற்படலாம். இந்த மாதத்தில் ஒரு பிரயாணம் சம்பவிக்கவும் இடம் உண்டு. உயர்ந்த அந்தஸ்திருப்பவர்கள், நம்பிக்கைக்கும், பொறுப்புக்கும் பாத்திரமாயிருப்பவர்கள், ஆகியவர்களுடைய தொடர்பு ஏற்படும். உத்தியோகத்திலிருப்பவர்களாயின் நல்ல ஊதிய உயர்வு கிடைக்கும். உறவினர்களாயிருந்து வயதில் பெரியவர்களாயுள்ளவர்களுடன் சச்சரவுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். குடும்பத்தில் ஏதேனும் கவலை ஏற்படுமென்பதற்கான அறிகுறி காண்கிறது. நண்பர் ஒருவரிடம் பாக்கியாய் நின்றுபோன தொகையைத் திரும்பப் பெறக்கூடும்; இல்லையாயின் எளிய நண்பர் ஒருவருக்கு உதவி புரிய நேரும். புதிதாக ஒரு விஷயத்தைப்பற்றி ஞானோதயம் ஏற்படும். வியாபாரத்திலிருப்பவர்களாயின் இம்மாத நடப்பு சுலபமாகவிருக்கும். லேவாதேவி விஷயத்தில் சௌகர்ய நிலைமை உண்டு.

ஜனவரி 18, 26, 31, பிப்ரவரி 1, 8, 13 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டமானவை.

## தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

உத்தியோகத்தில் மாறுதலைப் பெற விரும்பும் ராசிக்காரர்களுக்கு இம்மாதம் அவ்வித எண்ணம் சந்தோஷகரமாகப் பூர்த்தியாகலாம். மகிழ்ச்சிகரமாக ஒரு சிறிய அதிருஷ்டகரமான சம்பவம் நிகழக்கூடும். காதலர்கள் விஷயத்தில் இம்மாதம் கொஞ்சம் இடையூறுகள் இருந்து வரும். விவாஹமானவர்களாயின் இந்த மாதத்தில் அவர்களது தாம்பத்திய வாழ்வு உறுதியாகவும், பாசத்தோடும் உரம் பெறும். வியாபாரத்திலிருப்பவர்களாயின் கூட்டாளியாகத் தொழில் நடத்தும் முறையில் திட்டத்தை விஸ்தரிக்க முயற்சி செய்ய நேரும். இம்மாதம் அத்தகைய ஏற்பாட்டுக்கு உகந்ததேயாகும். மற்றவர்கள் விஷயத்தில் பணத்துறையிலோ அல்லது இதர நடப்புகளிலோ மாறுதல்கள் ஏற்படலாம். கம்பெனி நிர்வாகிகளாயிருந்தால் அதைப்பற்றிக் கொஞ்சகாலம் கவலைப்படும்படியிருக்கும். ஹேஷ்யம் செய்துகொண்டு பெரிய வியாபாரங்களில் இம்மாதம் ஈடுபடக்கூடாது. ஏனெனில் பண நஷ்டம் வெகு சீக்கிரம் இவ்விஷயத்தில் பலவீனப்பட்டுவிடும். வியாபாரம் பற்றிய கடிதப்போக்குவரத்து இம்மாதத்தில் தனித்த தொருவிசேஷம். நேரிடப் போட்டிகண்டு பேசுவதால் உள்ள பயனைவிடக் கடிதப் போக்குவரத்தால் ஏற்படக்கூடிய லாபம் அதிகமாயிருக்கும். குதிரைப்பந்தயத்தில் லாபமிராது. செலவு எதிர்பாராதவிதமாக வருவதோடு கடுமையாயுமிருக்கும்.



ஜனவரி 21, 30, பிப்ரவரி 3, 6, 12 தேதிகள் இவர்களுக்கெல்லாம் உன்னதமானவை.

## மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

சகல விதத்திலும் இம்மாதம் மகர ராசிக்காரர்களுக்கு விரும்பத்தக்கதாகும். இவர்களுடைய நடவடிக்கைகளில் சந்தர்ப்பங்களெல்லாம் தாமாக முன் வந்து நிற்கும். உத்தியோகத்தில் நல்ல ஊதிய உயர்வுண்டு. கஷ்ட நிலைமையில் ஆச்சர்யமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் பண வருமானம் ஏற்படலாம். குதிரைப் பந்தயமோ அல்லது வியாபார ஹேஷ்யங்களோ நற்பயனை அளிக்கும். பெரிய மாறுதலைச் செய்ய இம்மாதம் சிறந்தது. லட்சியத்துக்குச் சாதகமாகக் கிரஹ நிலையிருக்கிறது. பண வருமானம் சகல இனங்களிலும் சுலபமாயிருப்பதோடு நண்பர்கள் மிக முக்கியமான பாகத்தை இந்த ராசிக்காரர்கள் விஷயத்தில் ஏற்றுக் கொள்வர். பரஸ்பர ஸகாயமிருந்து வரும். நண்பர்களில் ஒருவருடனோ அல்லது மூவருடனோ சச்சரவுவைத்துக்கொள்ள வேண்டாம். இல்லையேல் அவர்கள் மனஸ்தாபத்தைத் தேடிக்கொள்ள நேரும். குடும்ப சுகம் ஓரளவு குறைவாயிருக்கும். உத்தியோகத் துறையில் சில புதிய நண்பர்கள் இந்த ராசிக்காரர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருப்பர். அதிக வேலையால் தேக நிலை உஷ்ணம் அதிகரித்து விடும். எனவே தேக ஆரோக்கியத்தை எச்சரிக்கையாக கவனித்து வர வேண்டும்.

ஜனவரி ... 26, 31, பிப்ரவரி 1, 8, 13 ...திகள். இவர்களுக்குச் சிறந்தவை.

## கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய.)

கும்ப ராசிக்காரர்களின் காரியங்கள் அனைத்தும் இம்மாதம் பிரகாசமாயும் உறுதியாயும் விளங்குமெனக் காண்கிறது. புதிய முயற்சிகள், வியாபார விஸ்தரிப்பு இவற்றில் ஈடுபட நேரும். இன்னும் கொஞ்ச காலத்திற்கு இம்முயற்சிகள் சிலவற்றிற்கு தடை ஏற்படும். பழைய அபிப்ராயங்களில் புதுமாதிரியான மனோபாவம் ஏற்படும். இது வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கூட்டாளியாகச் சேர்வதற்கு சிறந்த காலம். தப்பு அபிப்பிராயத்தால் பழைய பங்காளித்வம் பாதிக்கப்படும். சிலருக்குக் கோர்ட் விவகாரங்களால் கிலேசமேற்படும். சேவை செய்யும் இலாகாவில் எதிரி ஒருவர் காரணமாக மன அமைதி பாதிக்கப்படும். இருப்பினும் மதிப்புக்குரியஸ்தானமான 10 வது இடத்தில் சுபக்கிரஹங்கள் இருப்பதால், பேருக்கு எவ்விதமான இழுக்கும் ஏற்படாது. இந்த ராசிக்காரர்களின் நடவடிக்கைகள் கண்டு மேலதிகாரிகள் மிக மகிழ்ச்சியடைவார்கள். இன்னும் கொஞ்ச காலத்துக்கு குடும்பக் கிலேசங்கள் இருந்துகொண்டுதானிருக்கும். பணத்துறையில் நல்ல நிம்மதியுண்டு. இந்த ராசிக்காரர்களுக்கு தொழில் துறையிலுள்ள பிரமுகர்களின் தொடர்புகள் ஏற்பட்டு, அதனால் அனுகூலங்களும் கிட்டுவதாகும். சுக்ரனும், குருவும் இத்தகைய நட்புகளையும், தொடர்புகளையும், பயன் தரத்தக்க முறையில் உறுதிப்படுத்துவார்கள்.

ஜனவரி 17, 18, 23, பிப்ரவரி 1, 4, 7, 9, 11 தேதிகள் இவர்களுக்கு தாமான தினங்கள்.

## மீன ராசி

(பூரட்டாதி, 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய.)

தொந்திரவுகளை அளித்துவந்த கிரஹங்களெல்லாம் மீன ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பிரகாச நிலையைத்தருகின்றன. சுபக்கிரகங்கள் எல்லாம் போட்டியிட்டுக் கொண்டு சுபிட்சகரமாக வேலை செய்கின்றனர். பணத்தில் சந்தோஷகரமாக மாறுதல் ஏற்படும். செய்யும் சேவை பாராட்டப்படும். மேலதிகாரிகள் செவ்வையாய் நடத்துவார்கள். சிலருக்கு இரண்டுமடங்கு ஊதிய உயர்வும் கிட்ட நியாயமுண்டு. குதிரைப் பந்தயத்தில் ஆச்சர்யகரமான வருவாய் கிட்டலாம். கடன் உள்ளவர்கள் கடனை அடைத்து கவலைகளின்றி இருப்பார்கள். நண்பர்களில் டாக்டர்கள் யாரேனும் இருப்பின், அவர்கள் மூலமாக அனுகூலம் உண்டு.

உறவினர்களில் ஒருவர் திடீரென்று வந்து சேரலாம். உத்தியோக அந்தஸ்து அனுகூலமாக மாறுதலடையும். வேதாந்த நூல்களைப் படிக்க வேண்டுமென்ற தூண்டுதல் பிறக்கும். புதிய வருமான மார்க்கங்களை வெற்றிகரமாக அமைத்துக்கொள்ளலாம்; குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான மாறுதல்கள் ஏற்படக்கூடும். சிலர் விஷயத்தில் தூரதேசப்பிரயாணம் ஒன்றும் ஏற்படலாம்.

ஜனவரி 21, 23, 30, பிப்ரவரி 3, 7, 12 தேதிகள் இவர்களுக்குப் பொருத்தமானவை.

— ஸ்ரீ P. V. ராவ்,
29-ஏ., தேவராய முதலித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.






## 40

—கனல்—

### பூலோகத்தில் சிவலோகம்!

பொன்னி நாட்டுக்காவலைத் தன் பொறுப்பாக்கிக் கொண்டான் வரகுணன். கதிரவனைப் போல் ஒளி வீசும் அப்பாண்டியன் நாடெங்கும் ஞான ஒளியையும் பரப்பினான். மன்மதனைப் போல் அழகாய்த் திகழ்ந்தவன். அந்த அழகுத் தேனை எவ்விடத்திலும் அள்ளித் தெளித்தான். பராபரனை இறைவனிடத்தில் மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களையும் ஈடுபடுத்தி ஜிதேந்திரியனாகப் பிரகாசித்தான். பற்பல சத்கர்மங்களைச் சிறப்புச் செய்ததால் நான்முகனைப்போலவும், அலைமகளும் நித்திய வாசம் செய்யப் பெற்றமையால் திருமாலைப்போலவும் எல்லாவற்றையும் அறிந்து எங்குமே எதையுமே செய்யும் சக்தியை அடைந்திருந்த காரணத்தால் பரமசிவனாகவும் சுடர் வீசினான்.

மகோன்னதமான முறையில் காவல் புரிந்து வந்த அவனுக்கு ஒரு பெருந்துன்பத்தை விதி புரிந்து விட்டது.

ஒருநாள் தன்னுடைய அசுவத்தின் மீது ஆரோகணித்துக் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். புலிகள், யானைகள், பன்றிகள் முதலிய பல மிருகங்களை வேட்டையாடிக் கதிரவன் மலை வாயிலில் சாய்ந்த பிறகு, ஊர் திரும்பினான். வாயு வேகத்திலும் மேம்பட்ட நடையைக்கொண்ட அந்தப் பரியின் மீது ஏறியமர்ந்து அதிவேகத்திலே வந்துகொண்டிருக்கும்போது, பெரிய பாபச் செய்கையொன்றைச் செய்ய நேர்ந்து விட்டது.

வழியிலே ஓர் அந்தணன் படுத்திருந்தான். அவன் முகத்திலே குறு வேர்வை தோன்றிப் பெருகிய வண்ணமாக இருந்தது. எல்லாவற்றையும் மறந்து அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்து மண்ணிலே கிடந்த அப்பார்ப்பனன் மீது தன் கால்களை வைத்து மிதித்துப்பாய்ந்தது குதிரை! மறுகணம் விண்ணுலகுக்குச்சென்று விட்டது மறையவனுடைய ஆத்மா. ஆனால் இந்தச் செயலை அறியாதவனாய், ஆனந்தத்துடன் மன்னன் தொடர்ந்துசென்று அரண்மனைக்குட் புகுந்து விட்டான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம், இறந்துபோன மறையவனது உறவினர்களிலே சிலர் சவத்தைத் தூக்கிக்கொண்டு, மன்னனுடைய வாயிற்கடையிலே வந்து நின்று கூவினார்கள்.

"அரசே! செய்யத்தகாத காரியமொன்றைச் செய்துவிட்டீர்கள். பாபம்! மகாபாபம்! இனிமேல் உமக்கு இன்பம் இல்லை; சந்தோஷமில்லை; உங்கள் வாழ்வே அஸ்தமித்துவிட்டது!" என்று அவர்கள் கதறிய சொற்களைச் செவிமடுத்த செழியன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"நானா? தவறு செய்தேனா? என்ன செய்துவிட்டேன்?" என்று கலக்கத்துடன் கேட்டு, அவர்களுடைய மறுமொழியை எதிர்நோக்கி நின்றான்.

"தங்களது அசுவத்தின் காலால் தாக்கப்பட்டு மாண்டனன் இம் மறையவன்!" என்று கண்ணில் நீர் பெருகக் கூறினார்கள். அதைக் கேட்டதும் மன்னன் அடைந்த வருத்தத்திற்கு அளவில்லை. வெற்றி தயக்கத்தாலும், வேட்டையாடிய களைப்பாலும் தான் அறிவிழந்து போனதை நினைத்து அலறினான். பொன்னையும், பொருளையும் கொடுத்து அவர்களைப் போகச் சொல்லி விட்டுத் திரும்பி உள்ளே நுழைந்தான்.

பிரம்மஹத்தி தோஷம் நன்முகப் பற்றிக் கொண்டது அச்சமயத்திலே! பிடரியைப்பிடித்துத் தள்ளி வருத்தும் அந்தப் பழியின் கொடுமையை ஒரு கணமேனும் அவனால் சகித்திருக்க முடியவில்லை. தான தருமங்களை அனந்தமாகச் செய்வித்தான். பசுவின் வாயில் புற்களையிட்டுப் புண்ணியத்தை அடையப் பார்த்தான். வன்னி மரம், அரசமரம், வேப்ப மரம், ஆகியவைகளையெல்லாம் வலம் வந்து வணங்கினான். ஆனால் பலனில்லை, நெருப்பில் நெய்யிட்டதே போல மேலும் மேலும் பழி சூழ்ந்து தாக்கியது.

நாளுக்குநாள் அவன் நிலை மிகவும் பரிதவிக்கும்படியாக மாறிக் கொண்டேயிருந்தது. அவன் அழுக்கேறிய மாணிக்கமாகி விட்டான். பாம்பினால் விழுங்கப்பட்ட



சந்திரனைப்போல் ஒளி மங்கி விட்டான்!

உள்ளொளியும் தேயப் பார்த்தது. வாக்கிலேயும் ஞான ஊற்றுப் பெருகாமல் தடை பிறந்து விட்டது! 'அவன் என்ன செய்வான்' அறியாமல்தானே செய்தான்! அந்தப்பாழாய்ப் போன குதிரையின் அவிவேகம்தானே இதற்குக் காரணம் என்று பலர் கூவினார்கள்.

மறையவர்கள், "சுந்தரக் கடவுளை வலம் வந்தால், எல்லாம் குணமாகி விடும்" என்று கூவினார்கள். எம்பெருமானிடம் சென்று துதித்து, வலம் செய்தான் பாண்டியன்.

"மகேந்திரனது பழியையும், மகாபாதகத்தையும் தீர்த்தாய்! இப்பொழுது எனக்கு நேரிட்டுள்ள பழியைத் தீர்க்கலாகாதா?" என்று குறையிரந்து, மண்டியிட்டுக் கிடந்தான் வெகு நேரம்!

இறைவன் இதை அறியாமலில்லை. ஆனால் உடனே அந்தப் பழியைத் தீர்த்துவிடவும் இல்லை. திருவிளையாடல் புரியாமல், தீமைகளைத் தீர்த்துவிடுவதில் துளியேனும் ரஸமில்லை என்று அவர் கொண்டுள்ள கருத்து அனைவரும் அறிந்ததுதானே! இப்பொழுதும் அதற்கு விதை ஊன்றி விட்டார்.

பாண்டியன் உள்ளத்தில் ஒரு மலர்ச்சியை உண்டு பண்ணினார் பரமாத்மா. தான் வாழ்க்கையில் இனித்தூய்மைபெறுவது திண்ணம் என்று அவனை நம்பச் செய்த அந்தத் தெய்வ சக்தியின் வசப்பட்டு அரண்மனைக்குள் நுழைந்தான்.

சில நாட்களுக்கெல்லாம் பழி தீரும் புண்ணிய காலம் பிறந்து விட்டது. காலத்தின் வேகத்தில் மாறிப்போகாத செயல்களும் உண்டு என்பது அறிஞர் அறிந்த விஷயம். அதற்கு உதாரணம் சோழநாட்டு மன்னர்களின் நடவடிக்கைகள்.

புலிக்கொடியை உயர்த்திச்சேனைகளைத் திரட்டிக் கொண்டு கடல் போலக் கொந்தளித்துக் கொண்டு வந்துவிட்டான் சோழன். பாண்டியன் எதிர்த்துச் சென்றான். வீரகர்ஜனையுடன் மந்தரமலையால் கடல் கலங்கியது போல சோழன் சேனை சிதறியோடிற்று. சோழனும் புறமுதுகுகாட்டிப் பயத்துடன் ஓடினான். பின் தொடர்ந்து வந்த பாண்டியன் காவிரி நதியின் தென்கரையை அடைந்ததும், அவனைப்பற்றியிருந்த தோஷம் சிறிதளவு நீங்கியது. உடனே அங்கேயே தங்கிக் காவிரியில் தன் உடலைக்கழுவிக் கொண்டு, தென்கரையை நோக்கினான். பிரும்மாண்டமான கோபுரமொன்று தெரியக்கண்டு 'திருவிடை மருதப்பர் எழுந்தருளியுள்ள கோயில்' என்று தெளிந்து மிக்க வேகமாய்ச்சென்றான். கிழக்கு வாசலில் நுழைந்தான் தென்னவன். பழியும், பாசமும் அவனை நீங்கித்தலையே பிரிந்தன. பத்திரமாற்றுத் தங்கமே போல ஜோதி வீசிக்கொண்டு இறைவன் சன்னிதியை அடைந்தான். தெய்வத்தன்மை பொருந்திய மருதிலே வேதமாகிய வண்டுகள் ரீங்காரம் செய்து மொய்க்க அப்போது பெருகும் இனியதேனை உண்டு களித்து உளம் உருகிப்போனான்.

"நிராமயனே! மதுராபுரித் தெய்வமே! மருதப்பா! பழமைக்கும் பழமையான பரம்பொருளே! கருணைக்கடலே!" என்று அன்பு கனிந்த வார்த்தை மலர்களை இறைவனது திருவடியிலே சூட்டி நின்ற தென்னவன் முன்பு, இறைவன் கோடிக்கணக்கான சூரிய ஒளியுடன், ஜகத்ஜோதியாகக் காட்சியளித்தார்.

"குமாரா! மேற்கு வாசல்வழியாகச் செல். கிழக்கு வாசலிலே உன்னை வரவேற்கும் அந்தப் பழியை நீ மீண்டும் அடையமாட்டாய்! உன் பக்தியின் மகிமையால் உலகமே உய்யப்போகிறது, போய்வா!" என்ற இன்குரல் இறைவனிடமிருந்து ஒலித்தது. தெய்வத்தின் சுந்தர வடிவத்திலே தன் மனத்தை ஆழ்த்தியவன் அந்த இனிய வார்த்தைகளைக் கேட்டுப் பரவசமடைந்து மேற்கு வாசலிலே சென்றான். அவன் பெயரால் அங்கே விண்ணுயர்ந்த கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டது. சில நாட்களில் திருக்கோவில் திருப்பணிகளையெல்லாம் முடித்துக்கொண்டு திரும்பிச் சென்றான் மதுரைக்கு.



மேற்கண்டவாறு அகத்தியர் கூறிக் கொண்டேயிருந்தபோது ரிஷிகள் எல்லோரும் 'எங்களுக்கு உண்டாகியிருக்கும் சந்தேகம் ஒன்றைத் தீர்க்க வேண்டும்" என்றார்கள். குறுமுனிவர் 'என்ன அது? என்றார். "மதுரையிலே எவ்வளவோ பாபங்களைத் தீர்த்திருக்கிறார் இறைவன். வரகுணன் செய்த பாபத்தைத் திருவிடை மருதூரில் ஏன் தீர்க்க வேண்டும்?" என்றார்கள் ரிஷிகள்.

"அதற்குக் காரணமிருக்கிறது. மதுரையிலே சுந்தரக் கடவுள் எல்லோருடைய பாபங்களையும் சர்வ சாதாரணமாய்ப் போக்கி விடுகிறார் என்பது பிரசித்தமாகி விட்டது. அதனால் எல்லோரும் பாப

செய்ய அஞ்சாமல் இருந்து விட்டாலும் இருக்கலாம். ஆகையினால் தான் உலகத்திற்கு ஒரு பாடமாக இருக்க வேண்டி, வரகுணனின் பாபத்தை மருதூரில் மாய்த்தார்' என்றார் அகத்தியர்.

"ஆஹா! எம்பெருமானது மேலான தகைகளை என்னென்று புகழ்வது?" என்று எல்லோரும் மெய்ம்மறந்து பரவசம் அடைந்தார்கள்.

மதுரையைஅடைந்த வரகுணன் வேதம், ஆகமம், புராணம் முதலிய எல்லாவற்றிலும் நன்கு பயிற்சியை அடைந்து அவைகளிலேயே ஈடுபட்டான். 'மேலான உலகம் எது?" என்று அவன் கேட்ட கேள்விக்குப் பெரியோர்கள் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டு, 'சிவலோகமே அது என்றார்கள். அன்று முதல் சிவலோகத்தையும், சிவலோகநாதனையும் கண்டு மகிழ வேண்டும் என்ற அவா, அவன் நெஞ்சிலே வேரூன்றியது.

அன்று சிவன் ராத்திரி. பாண்டியன் ஆசாரசீலனாய்க் கோவிலையடைந்து இறைவனிடம் முறையிட்டான், "சிவலோகத்தைக் காண ஆசை கொண்டுள்ளேன்! என் தந்தையே! அருள் செய்ய வேண்டும்" என்று பக்திப் பெருக்குடன் அடங்கிப் பணிந்து கேட்ட பாண்டியனுக்கு அந்தப் பேராநந்தமும் கிடைத்து விட்டது.

கோடிக் கணக்கான சந்திர மண்டலங்கள் கீழே இறங்கி வந்தது போல ஒரு தோற்றம். அங்கே சிவலோகம். இளந்தென்றல் வீசுகிறது; மலர் மணம் கமழ்கிறது: கற்பூர வாசனையும் கலந்து பரிமளிக்கிறது. வெண்கமலங்களும், செந்தாமரைகளும் பூத்துள்ள ஓடைகளும், நதிகளும் பார்க்கப் பார்க்க உணர்ச்சியைப் பெருக்குகின்றன. ருத்ர கணிகைகளின் மதுரவாயிலிருந்து இன்னிசை எழும்புகின்றது. மலர்ந்த பூந்தருக்களிலே வண்டுகளின் ரீங்காரம்.

இவைகளையெல்லாம் கண்டான். 'இன்னும் பார்' என்ற நந்திதேவன் குரலைக் கேட்டுத் திரும்பினான். பொன் கோபுரங்கள், மணி வீதிகள், மாளிகை வரிசைகள் இவைகளையெல்லாம் பார்த்தான். ஒருபுறம் பிரமபதவி. மறுபுறத்தில் திருமால் வாழிடம். திக்பாலர்கள் வாழும் இடங்கள் இன்னொருபுறத்திலே. சாலோகம், சாமீபம், சாரூப்யம் முதலிய நிலையை அடைந்தவர்கள் அங்கே ஒளி வீசுகிறார்கள். அவர்களையெல்லாம் பார்த்துப் பரவசம் அடைந்தவன் முன்னே, அவனுடைய மூதாதையர்களும் காட்சியளித்தார்கள்.

பிறகு, இறைவன் திருமுன்பு அழைத்துச் சென்றான் நந்திதேவன். அங்கே கண்ட காட்சிகள் நாவினால் புகழும் தரத்திலே அடங்காது. வேதாகமங்கள் வடிவு கொண்டு துதிக்கின்றன. தும்புரு நாரதர்கள் வீணை வாசிக்கிறார்கள். அசைகின்ற பூங்கொம்புகள்போல, ஆடுகிறார்கள் அரம்பையர்கள். விநாயகரும், முருகரும் கைகுவித்து நிற்கிறார்கள். பல்லைக் கடித்தவண்ணம் பூதகணங்களும் நிற்கின்றன. முத்தலைச் சூலங்களைச் சிவகணங்கள் தாங்கி நிற்கின்றனர். தேவர் சித்தர் அசுரர். சாரணர், விஞ்சையர், கின்னரர், மாதவர். யக்ஷர். சுத்த யோகிகள் இன்னும் பலர் துதிக்கிறார்கள்.

"சிவ சிவ சங்கர" என்ற நாதம் ஒலிக்கிறது. பார்வதி குறுநகை பூக்கிறாள். எம்பெருமான் கருணைக் கடலாகக் காட்சியருளுகிறார்.

வரகுணன் விழுந்தான். எழுந்து ஆடினான். உடலின் உரோமம் சிலிர்த்தது. அன்பு வடிவாய் ஒரு சில நேரம் பேசாது நின்றான்,

திடீரென்று ஒரு மாறுதல் உண்டாயிற்று. வரகுணன் இப்பொழுது பார்த்தது மதுரையை! மீனாட்சியும் சுந்தரருமே அவன் முன்பு காட்சி கொடுக்கிறார்கள்!

'ஆகா! நான் என்ன புண்ணியம் செய்தேன்" என்று ஆடிப் பாடுகிறான் புண்ணியச்செல்வன்,

"நாயினேன் என்னை
நடுக்கும் பழியகற்றித்
தாயினேர் ஆகித்
தலை யளித்தாய் தாள்சரணம்
சேயினேன் காணச்
சிவலோகங் காட்டிப்பின்
கோயில்நேர் நின்றவருள்
குன்றே நின் தாள் சரணம்"
"வெங்கட் பழியின்
வினையோனை வேருக்கித்
திங்கட் குலக்களங்கம்
தீர்த்தாய் நின் தாள் சரணம்
அங்கட் சிவபுரம் உன் (டு)
அன்புடையார்க் கென்பதை,
இன் (று)
எங்கட்குக் காட்டி
இசைவித்தாய் தாள் சரணம்"

மகிழ்ச்சிப் பூரிப்புடன் அரண்மனைக்குள் புகுந்தான் மன்னன், அன்று முதல் மதுரைப்பதி 'பூலோகத்தில் சிவலோகம்' என்று ஈரேழு உலகங்களும் புகழும்படியாக விளங்கப் பெற்றது.

## 41

## அபூர்வ ராகம்

மகேந்திரனைப் போல மாட்சிமையுடன் ஆட்சி புரிந்து வந்தான் வரகுணன். வடதிசையிலிருந்து வீணைப் பாடகன் ஒருவன் மதுரைக்கு வந்தான். அவனுடைய இன்னிசை வெள்ளத்தில் மூழ்கிக் களித்த மன்னன் பல சம்மானங்களையும் விருதுகளையும் அளித்துத் தனியான மாளிகையும் தந்து பெருமைப்படுத்தினான்.

ஏமநாதன் என்று அப்பாடகனுக்குப் பெயர். பாண்டியன் தன்னைக் கௌரவித்ததிலிருந்து அவனைக் கர்வமானது பற்றிக் கொண்டது. 'என்னொப்பார் எவருமிலர்' என்று தருக்கித் திரியலானான். உண்மையிலே, உன்னதமான சாரீரமும் உருக்கமான வீணை வாசிப்பும் அவன் கொண்டிருந்தவைகளேயானாலும் அகந்தை அவன் பெருமையை அழிக்கப் பார்த்து விட்டது.

வரகுணன் தன் நாட்டுப் பாடகனாகிய பாணபத்திரன் என்ற தூய தவச் செல்வனை அழைத்து வரச் செய்தான். "வடதிசைப் பாணனுடன் நீ பாடவல்லையோ?" என்றான், "இறைவனது அருளால் பாடி வெல்வேன்" என்றான் பாணபத்திரன்.

அங்கிருந்தும் விடைபெற்று அகன்றவன் தன் வீடு செல்லும்போது இனிய சில ராகங்களையும், பாடல்களையும் கேட்க நேர்ந்தது. ஏமநாதனது கற்றுக் குட்டிகளே அவ்வாறு பாடித் திரிந்தவர்கள்.

"அவனுடைய சிஷ்யர்களே இவ்வளவு மேன்மையாகப் பாடினால் அவன் பாடலை என்னென்று நினைப்பது! என்று கலங்கியவனாய்த் திகைத்தான், மறுநாள் தனக்கு அரசன் விதித்திருந்த கட்டளையை நினைத்தவளவில் சஞ்சலம் மூண்டது.



"இறைவனே கதி" என்று கோவிலுக்குள் புகுந்து வணங்கி வீழ்ந்தான், "நாளைக்குத் தங்கள் அருளே என்னைக்காக்கதல்லது! வேறு கதியிலேன்!' என்று கூறி வீடுசென்று படுத்தான். நித்திரை வரவே இல்லை. உண்மையான மானி அவன். சிறந்த பாடகனுமாவான். ஆனால் உள்ளத்திலே பூசல்! மறுநாள் போட்டியில் வென்றால்தான் தூக்கம், அதுவரையிலும் அமைதி ஏது?

மாலையிலே ஒரு விநோதமான செயல் நடந்தது, எவருக்குமே தெரியாது. அதன் விளைவு பின்னால் பெரிய மகிமையையே உண்டுபண்ணிவிட்டது.



கந்தைத் துணியை உடுத்திக்கொண்டு, இடுப்பிலே செருகிய அரிவாளுடன் ஒரு தள்ளாத கிழவன் தெருவிலே சென்றுகொண்டிருந்தான். அவன் தலையிலே விறகு கட்டு கனமாகவிருந்தது. காலிலே தேய்ந்ததொரு செருப்பு. எலும்புகள் தெரியும்படியாக இளைத்த உடம்புட சென்ற அவனைக் கண்டவர்கள் எல்லோரும் 'ஐயோ' என்று மனமிரங்குவார்கள். அவன் விறகுக்கட்டைச் சுமைதாங்கியின் மீது இறக்கிப் பசுமையான நீரோடையிலிருந்து இரண்டு கை நீரை யள்ளிக்குடித்துக் களைப்பாறினான்.

பிறகு தலையில்வைத்துக்கொண்டு "விறகு வாங்கலையா!" என்று விநோதமாகக் கூவினான். பலர் விறகுக்கு விலை என்ன என்று கேட்டனர். அடாத விலையைக் கூறி, அவர்களை வாங்கவொட்டாமல் செய்து தன் தலையிலேயே சுமந்துகொண்டு சென்றான்.

அப்போது நன்றாகக் கதிரவன் மறைந்து இருளும் சூழ்ந்த சமயம். செவ்வல்லிப் பூக்கள் மலர, சந்திரோதயமுண்டாயிற்று. வண்டுகள் தாமரையிலேயே துயின்றன. சந்திரனாகிய வதனமும் அதிலே களிங்கமாகிய திலகமும் கொண்டு, இருளாகிய கூந்தலுடன் நக்ஷத்திரங்களாகிய முத்து நகைகளை அணிந்து பார்வதிதேவியே தன் நாதனைத் தேடிக்கொண்டு வருவது போலிருந்தது மாலைக்காலம். ஏமநாதன் வீட்டுத் திண்ணையில் கிழவன் விறகை இறக்கி வைத்துத் தானும் உட்கார்ந்துகொண்டான். பிறகு நாவைத் தன் இஷ்டப்படியெல்லாம் பாடச் செய்தான். அந்த இன்னிசையைக் கேட்ட ஏமநாதன் "யார் பாடுவது!" என்று சந்தேகித்து திண்ணைப் புறத்திற்கு வந்தான்.

"நீ யாரப்பா?" என்றான் ஏமநாதன்.

"நானா? என் கதையா?" அதை ஏன் நீங்கள் கேட்கிறீர்கள்! அது மிகவும் சோகம் சூழ்ந்தது" என்றான் கிழவன்.

"இனிய இசையைப் பாடுகிறாயே என்பதனால்தான் கேட்டேன், சொல்வாயாக" என்றான் வடதிசைப்பாணன்.

"நான் பாணபத்திருடைய அடிமை. கிழவனாகி விட்டேன் என்ற காரணத்தால் அவரால் நான் விலக்கப்பட்டு விட்டேன். அவரிடமிருந்து கற்ற பல அபூர்வ ராகங்களில் ஒன்றைத்தான் இப்போது பாடினேன். என்னுடன் சேர்ந்து பயின்ற பலர், என்னைக் காட்டிலும் நன்றாகப் பாடுவார்கள். இந்தத் தள்ளாத வயதிலேயே இப்படிப் பாடுகிறேனே! அந்தக் காலத்தில் நீர் என் பாடலைக் கேட்டிருந்தால் அப்படியே மதி மயங்கிப் போயிருப்பீர்!" என்றான்விறகுவர்த்தகன்.

"அப்படியா? இன்னுமொருமுறை நீ பாடிய அந்தப் பாடலையே பாடு" என்றான் ஏமநாதன். வீணையை எடுத்துக் கொண்ட கிழவன் சுருதி கூட்டி 'சாதாரி' என்ற அபூர்வ ராகத்தைப் பாட ஆரம்பித்தான். ராக ஆலாபனையின்போது உடற்குற்றங்கள் உண்டாகவில்லை. பாடல்தொழிற்குற்றங்கள் இல்லை. அருவியின் இழுமெனும் ஓசை, மத்தள ஒலி வெண்கலத்தொனி, சங்க நாதம், வண்டின் குரல் ஆகிய இசைக் குணங்களுடன், மூங்கிலினின்றும் இலை உதிர்தல் போல நாதகீதங்கள் தவறுமலும் பாடினான். வீணையொலியுடன் சேர்ந்து ஒலித்தது பாசுரம்.

"விரைசார் மலரோன்
அறியா விகிர்தன்
அரசாய் மதுரை
அமர்ந்தான் என்னே
அரசாய் மதுரை
அமர்ந்தான் அவன் என்
புரைசார் மனனும்
புகுந்தான் என்னே"

என்ற சில இனிய ஸாஹித்யங்களைப் பொழிந்தபோது உலகமெங்குமே ஒரு நாடகம் நடந்தது.

கடல்கள் அப்போது ஒலிக்கவில்லை; மரங்கள் அசைந்து ஆடவில்லை. மலையருவிகள் தாவிப் பாயவில்லை. எழுதி வைத்த ஓவியத்தைப்போலச் சராசரங்கள் எல்லாம் அசையாதிருந்தன. வித்யாதரர்கள் வீணை வாசிப்பதை நிறுத்திவிட்டார்கள். சிலர், நரம்பின் நாதமும் கண்டத்தொனியும் வேறானதால், நாக்குழறிப் போய் தத்தமது மனைவிகளின்மேல் மயங்கிச் சாய்ந்தார்கள்.

ஈரேழுலகும் பெரு மயக்கம் கொண்டிருந்தது. நாயகருடன் கூடியவர்கள் பிரிய விரும்பவில்லை.

பிரிந்தவர்கள் மதனனின் பாணத்தாலே தாக்கப்பட்டார்கள்.

பட்ட மரங்கள் தளிர்த்தன. பாம்புகளும், மயில்களும் கூடி மயங்கி நின்றன. யானையும் சிங்கமும் கை கலந்து மகிழ்ந்தன. மானும், புலியும் தோழமை கொண்டு திகழ்ந்தன. அந்த முல்லைப்பண்ணான 'சாதாரி'யைக் கேட்ட ஏமநாதனின் நிலையைச் சொல்லவும் வேண்டுமா?

பாடி முடித்த விறகாள் பாராட்டுடன் விடை பெற்று அகன்முன்.

"ஆகா! என்ன ராகமிது? இது யாருக்கும் தெரியாதே! எனக்கே தெரியாத ராகமல்லவா இது? எவரும் பாடக் கேட்டிராத இந்த தேவராகத்தை—அபூர்வ ராகத்தைப்- பாணபத்திரனிடம் கற்முனுமே! இவனே இப்படிப் பாடுகிருனே! அப்பாணபத்திரன் பாட்டு நமது கற்பனையில் அடங்குமா? எத்தகைய சக்தியைப் பெற்றிருக்கிருன் அவன்!" இவ்வாறு நினைத்து மனம் மயங்கிய ஏமநாதன் மறுகணத்திலே புறப்பட்டான். தான் இனி இந்தத் தென் திசை மதுரையை எந்நாளும் எட்டிப்பார்ப்பதில்லை என்ற உறுதியுடன் புறப்பட்டான். வீணைகளே முதல் எல்லாவற்றையும் போட்ட இடத்திலேயே போட்டு விட்டு, மானத்திற்கு அஞ்சி, வடதிசையில் ஓடினான். நள்ளிரவிலே அச்சத்துடன் ஓடியவன் இனி ஏன் திரும்பப் போகிருன்!

அதே சமயத்தில் பாணபத்திரன் படுக்கையில் புரண்டுக் கொண்டிருந்தேன்.

"நான் வாதிலேவென்று,துரத்தி விட்டேன் ஏமநாதனை! விறகு சுமந்து விநோதம் புரிந்தேன், உன் வருத்தம் ஒழிக!' என்ற குரல் அவனது கனவிலே ஒலித்தது. இறைவனுடைய அருளால் கண்ணயர்ந்தவன், கனவு நிலையை உணர்ந்து மயிர்க்கூச்செறிய எழுந்தான்.

சூரியோதயத்தின் முன்னேயே இறைவன் கோவிலைக் குறுகி, மண்டியிட்டு நின்று வணங்கி வாழ்த்தினன்.

"பெரிய குற்றம் விளைந்து விட்டதே! நான் குறையிரந்தது உண்மைதான்! ஆனல் அதற்காக இறைவன் விறகு சுமக்க வேண்டுமா? பாதங்கள் சிவக்க, தலை பொடிக்கத் திரையிலே நடக்க வேண்டுமா?" என்று கதறிப் பாடலானன்.

"கூடிய கானகம் புகுதவோ
கட்டிய விறகை
முடியில் ஏற்றவோ முண்டகத்
தாள்கள் நொந்திட வந்(து)
அடியனேன் பொருட்(டு)
அடாத சொற்
பகரவோ வஞ்சக்
கொடியனேன் குறையிரந்தவா
விளைந்ததே குற்றம்

என்று பணிந்து பாடிய பிறகு. பாண்டியன் அவைக்குள் புகுந்தான்.

'ஏமநாதனைக் காணவில்லையாம்! யாரோ ஒரு விறகு தலையன் ஓர் அபூர்வ ராகத்தைப் பாடக் கேட்டானும் நேற்று மாலை. அது என்ன விஷயமென்பதே தெரியவில்லை. நீ நேற்று ஏதேனும் செய்தாயா?" என்று கேட்டான் பாண்டியன்.

'அரசே! அடியேன் இறைவனிடம் சென்று முறையிட்டேன். நேற்று இரவு என் கனவிலே தோன்றினர் பரமாத்மா. விறகாளாகி வந்து, பாடித் தோற்கடித்துத் துரத்தினராம் எம்பெருமான்." என்று அடக்கத்துடன் கூறினன் பாணபத்திரன்.

"ஆகா! இறைவனையே அழைத்த உங்கள் மகிமையை என்னென்பேன்! இனிமேல் நீரே எனக்கு இறைவன்!" என்று கூறிப் பொன்னாலும், ரத்னங்களாலும் அர்ச்சனை புரிந்தான் பாணபத்திரனை.

'அபூர்வ ராகத்தைப் பாடி, எனக்கு அபூர்வமான பதவியைக் கொடுத்த என் இறைவனே! நான் என்ன செய்யப்போகிறேன் தங்களுக்கு!" என்று கூறி, கண்ணீர் பெருக்கினன் அந்தப் பாணர் குலத் தலைவன்.

---


குழந்தைகள் விரும்புவது

காஸ்டோபீன்



ஏனெனில், சாகலேட் மணமுள்ளது. இதர மலமிளக்கிகளின் துர்வாசனையால் அவற்றை வெறுக்கின்றனர். நல்ல ஆரோக்கியத்துக்கு சிறந்த உதவியளிக்கும். மலச்சிக்கலை ஒழிக்கும் தனி பழக்கத்தை உண்டுபண்ணுது



ஒருபுட்டி தயாராக வைத்துக் கொள்க.

CASTOPHENE - CHOCOLATE LAXATIVE



மாதவிடாய் நின்றுவிட்டதா! எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஊனமின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகி ரேசனி" உத்தரவாதமானது. கவர்மெண்டு ரிஜிஸ்டர்ட். விலை ரூ. 2—12—0.

நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகர" சிறந்த மருந்து ஜாமீனபற்றது. நிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 1-8-0. வி. பி. அணா 12 தனி

ஆண்மை 'மதன் விலாஸ் ரசாயன்' அற்புத மருந்து வீரியமின்மை, நரம்புத் தளர்ச்சி, பசியின்மை முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0.

Kaviraj

M. Kabyatirtha (S. W.)
70, CORNWALLIS STREET,
CALCUTTA.





உலகப் பிரசித்திபெற்ற நிபுணர்.



நீங்கள் சோர்வும், பலஹீனமும் அடைந்திருந்தால் உடனே டாக்டர் நாருவிடம் காண்பியுங்கள். புகழ்பெற்ற நரம்பு நிபுணர். உங்கள் தேகத்தைப் பரிசோதித்துப்பார்த்து உங்கள் அயர்வுக்குக் காரணம் என்னவென்பதைத் தெரிந்து மருந்துகொடுத்து சொஸ்தம் செய்வார். பூரணமான நிவாரணத்துக்கு உத்திரவாத சிகிச்சையளிப்பார். அகால வயோதிகத்துக்கும் சிறந்த ஔஷதம் கொடுத்து இளமையின் வீர்யத்தை அளிப்பார். தீராத ஆண், பெண் வியாதிகளைத் தீர்ப்பதில் புகழ்பெற்ற,

டாக்டர் நாரு,
(ஸெக்ஸாலஜிஸ்ட்)

நாரு ஆஸ்பத்திரி,
24, பிராட்வே, மதராஸ்.

நேரம்:
காலை 8-மணி முதல் 12-வரை
மாலை 4-மணிமுதல் 8-வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை நாட்களிலும் காலை 8-மணிமுதல் 12-மட்டும்.
மாலையில் கிடையாது.
இரகசியமான வைத்தியம்.
பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.



இருமல், சுவாசகாசம்
தொண்டை புண்ணுக்கு
நேரடியான நிவாரணி.

—(*)—

தொண்டைக்கு உபத்திரவமளிக்கும் கிருமிகளை சுவாசிப்பது போல் அதைஎதிர்க்க அதற்கான நிவாரணியையும் சுவாசிக்க வேண்டும். நேரடியான நிவாரணிக்கு பெப்ஸ் சிறந்ததாகும்.

வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து படத்தில் காணப்படுவது போல் சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. (1) திரவ ரூபமான மருந்துகள், குடலுக்குத்தான் செல்லுகின்றன. (2) இதனுல் பெப்ஸ் தொண்டைக்கு சமனமூட்டி, சுலபமாக சுவாசிக்கஉதவி, கடுமையான இருமல், ஜலிப்பு, சுவாசகாசம், முதலியவற்றை குணப்படுத்தும் எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி பார்க் டவுன், மதராஸ்.





எப்பொழுதும்பெப்ஸ்உட்கொள்ளுங்கள்

PEPS

நேரமாக சுவாச மாத்திரைகள்.



'பாவ்லா' 'BAWLA'

சொறி, சிரங்கு, முகப்பரு, வேனல் கட்டி, ஊரல், நமைச்சல், சேத்துப்புண், தீப்பட்ட புண், வெட்டுக்காயம் முதலிய சர்ம வியாதிகளுக்கு மேல் பூசும் மருந்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

R. M. COMPANY, POST BOX NO. 985, BOMBAY. 1.



ஸ்ரீமத் பகவத் கீதை விலை ரூ. 3—8—0 (தபாற் செலவு பிரத்யேகம்)

மானேஜர்: சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

## நீரிழிவு, மதுமேகம் என்னும் கொடிய வியாதிக்கு:

திவான்பகதூர் A. அப்பாதுரை பிள்ளை M. A., I. M. O., M. L. C. ரிடையர்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்டிரீஸ், 52, பூனமல்லிஹைரோட், மதராஸ். எழுதுவதாவது:—

'பண்டித ஸ்வாமி எஸ். சீனுவாச அய்யங்கார் ரிஜிஸ்டர்ட் பேடண்ட் மருந்தாக செய்து இருக்கும் "மயூர காயகற்பம்" என்னும் திவ்ய ஔஷதத்தைப்பற்றி பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். நாள்தோறும் வைத்தியர்களிடமிருந்தும், வியாதியஸ்தர்களிடமிருந்தும் வரும் கணக்கில்லாத கடிதங்களில் இம்மருந்தின் அற்புத செயல்களை நேரில் ருஜுப்படுத்துகிறது. இது நீரிலிருக்கும் சர்க்கரையையும், நாவரட்சியையும், அதிக நீரையும் குணப்படுத்து வதேயல்லாமல், எடையையும் விருத்தியாக்கி, இரத்த புஷ்டியையும், வலிவையும் உண்டாக்குகிறது. நேரில் மருந்து சாப்பிடாத வியாதியஸ்தர்களுக்கு இந்திரிய நிக்கிரஹம், குறிப்பிட்டகால அளவிற்கு விடாமல் மருந்து சாப்பிடுதல், பத்திய நெறி, இவைகளைப்பற்றி மிகவும் பிடிவாதமாக சொல்கிறார். அநேக சிக்கலான வியாதியஸ்தர்களை சொஸ்தப்படுத்தியதை நேரில் அனுபவம் உண்டு. வியாதியஸ்தர்களுடைய சீக்கிரமான குணத்திற்கும், பூரண ஆரோக்கியத்திற்கும், பண்டித ஸ்வாமியை புகழத்தக்கது.




11-D, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோட், எழும்பூர், மதராஸ்.




## தேவை

கீழ்குறிப்பிட்டுள்ள இடத்தில் எமது மித்திரன் தினசரி, வாரப் பதிப்பு இவைகளை பட்டுவாடா செய்யவும், விற்பனை செய்யவும் ஊக்கமுள்ள ஏஜெண்டு தேவை. உள்ளூர் வாசியாக இருந்தால் நலம். விருப்பமுள்ளவர் கீழ்கண்ட விலாசத்திற்கு..............விண்ணப்பித்துக்கொள்ளவும்.

கொழும்பு (சிலோன்)

சர்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்,
மவுண்ட்ரோட்,
சென்னை.

ஜுரத்திற்கு
கர்னிக் எசுமிகசர்
உபயோகியுங்கள்
KARNIK BROS. BOMBAY 4.

**DEAFNESS**

Partial or total—complicated with head noises and other troubles—how long and what causes, treated radically in four weeks by our safe, sure, world-wide reputed and tested Herbal home-treatment. Guaranteed cent per cent success. Particulars on request.

KAMALA WORKS S-8 PANCHPOTA, BENGAL.

...தவிடாய் நின்றுவிட்டால்—கடுமையான ... தரும் ஒரே நாளில் வெளிப்படுத்தும். ... பிரபர்தீஸ் கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட். ... ரூ. 3. கர்ப்பத்தடைக்கு ... ரூ. 2. ... ரூ. 4-8 வி. பி. அனு 12.

Kaviraj R. Chakravarthy (S. M.) Bhowanipur Calcutta ... அப்பா & கோ 286 ... மதராஸ்



## ஸ்பேட் க்ளாவர் பீடி

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)




மேற்கண்ட வியாபாரம் 1923வருஷத்தில் என் தகப்பனாரான காஜிசாகிப் முஹமத் உமர்சாகிப் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அவருக்குப்பின் அவருடைய மூத்த குமாரனான முஹமத் நூருல்லா என்று பெயருள்ள என்னால் கோர்ட்டு ஏலத்திலேயே மேற்படி ஸ்தாபனம் வாங்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. இவ்வியாபாரத்தில் வேறு யாருக்கும் எவ்வித உரிமையும் இடையாது. காலஞ்சென்ற காஜிசாகிப் முகம்மது உமரின் குமாரனாகிய நான் மேற்படி வியாபாரத்தை பெரிதும் விருத்தி செய்துள்ளேன். ஸ்பேட் க்ளாவர் பீடி தயாரிப்பில் உயர்தர புகையிலையும் நேர்த்தியான சரக்குகளுமே உபயோகிக்கப்படுகின்றது. அபூர்வ மணமும் சுவைச்சியுமுள்ள பீடிகளை தயார் செய்கிறேன். என் தகப்பனார் காலத்திலிருந்த சிறந்த ரகமே இன்றும் காணலாம். உத்தமமாகத் தயாரிக்கப்படும் இவ்வரிய சரக்குகளில் சிறந்த ரக புகையிலைதான் உபயோகிக்கிறேன். வாடிக்கைக்காரர் அனைவருக்கும் பூரா திருப்தியளிப்பதே என் நோக்கம்.

எப்பொழுதும் ஸ்பேட் க்ளாவர் பீடியையே உபயோகியுங்கள்.

பீடியின் சிறந்த மணத்தை நன்கு அனுபவியுங்கள். உயர் ரக ஆர்டன் பீடிகளையும் நானே தயாரிக்கிறேன். சிறந்த ரகமும் மணமும் பொருந்திய

ஸ்பேட் க்ளாவர் பீடிகளும் ஆர்டன் பீடிகளும்
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

முகம்மது நூருல்லா,
சோல் புரொப்ரைட்டர் ஸ்பேட் க்ளாவர் பீடி & ஆர்டன் பீடி.
37, மண்ணடி தெரு, மதராஸ்




ஒரு மணியில் வாலிபம்,

## காமசிந்து

(ரிஜிஸ்டர்ட்)

நீற்றுப்போன தாதுவைக் கெட்டிப் படுத்தியும், அதிகப்படுத்தியும், சப்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி இல்லற சுகத்தை இஷ்டம்போல் அனுபவிக்கச் செய்யும். 30 மாத்திரை விலை ரூ. 3, 60 மாத்திரை ரூ. 5-8-0.

Dr. N. V. R. கோபாலன் M. D. (H)
The K. B. Pharmacy, (Regd)
(ஸ்தாபிதம் : 1919)
103, ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

## காந்தி ஜோஸியர்



ஒருவருஷப்பலன் மாதவாரி எழுத ரூ. 5, ஆருடம் 5, கேள்விகளுக்கு பதில் ரூ. 1. வி.பி. அணா 5. ஜனன கால விவரம் OR எழுதும் நேரம் தேவை. ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க

## ஆனந்த குசுமாகர லேகியம் (Registered)

சாப்பிடுங்கள்

தாதுவிருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது

தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஔஷதம்

விலை ரூ. 2—8—0 :: விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால் (REGD)

189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.





கல்கத்தா ரஸிகரஞ்சனி சபையாதரவில் சென்றமாதம் கடைசி வாரத்தில் ஸ்ரீமதிகள் அஞ்சனவும், உமசாஸ்திரியும் அபிநயம் பிடித்து காட்டினர்.

— உங்கள் முக வசிகரத்திற்கு —

# "நிக்ரோ" ஸ்னே

நேஷனல் இண்டஸ்டிரியல் கம்பெனி, கும்பகோணம்.

## "சூரிய நமஸ்காரம்"

(ஸ்ரீ ஜி. எம். ரெங்கன் எழுதியது)

நமஸ்கார விதிகள்—உணவுப்பொருள்கள்—தேக போஷணை—சுவாசம்—பிராணாயாமம்—நோயற்ற வாழ்வு—தண்டால்—பஸ்கி பயிற்சி—மற்றும் அநேக விஷயங்களுடன் கூடிய தேகப் பயிற்சி புத்தகம்—விலை அணா நான்கு.

(ஒன்றரை ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பப்படும்)

விவரங்களுக்கு:

சேலம் ஸௌராஷ்டிர ஸமூக அபிவிருத்தி சங்கம்,

இலவச வாசகசாலைகள், அம்மாபேட்டை மெயின்ரோட், சேலம்.




கேசரி குடீரம் லிட். மதராஸ்

ஒரிஸ்ஸா ஸமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள்:

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்லாகிமிடி-செகந்திராபாத்-பெஜவாடா-மதுரை

ஏஜண்டுகள் தேவை.

சக்தி சுகந்த பாக்குத்தூள்

வாங்கி உபயோகியுங்கள்

Props:— சக்திபரமேஸ்வர்கம்பெனி

B.R.N.K.J.S.K. 26, மால்ராவுத்தர் தெரு, மதுரை



## பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

குழந்தைகளின் சுரம், குலை, ஈரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான், அசல் விஜயகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

**Dr. பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில், கீழவீதி

திருச்சி கிளை:— 15, புகழ்பெ பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

## ருக்மணி பற்பொடி

பற்களுக்கு அழகு, உறுதி தரும்.

ஏஜன்ஸிக்கு எழுதவும்.

ராமவிலாஸ்,

சேந்தமங்கலம் (சேலம் Dt.)

## மாதவிடாய் நின்றிருந்தால்



குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்தரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில்பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. மிகக் கடுமையானால் ரூ. 8. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12 பிரத்யேகம்) Mrs P. DEVEE, F.D.S. (S.W.) Tollygunge: CALCUTTA. ஸ்டாக்கிஸ்டுகள்: (1) ஹாரி & ஸன், 93, சைனாபஜார் ரோட் மதராஸ். (2) ராகவன் & கோ., ஸ்ரீ நரசிம்மராஜ ரோட், பெங்களூர் ஸிடி. (3) J. Tirath & Co., Mahatma Gandhi Rd., Karachi; (4) K. C. Mathew & Co., Kozhancheri-Travancore; (5) Miss D. D. Pande, Harinivas, "Kingsway", Dadar, Bombay.

## சியவன்ப்ராஸ்

ஜலதோஷம், இருமல், காசம், பலவகைப்பட்ட பலஹீனம் இவற்றிற்கு சிறந்த டானிக். 1 டின் விலை ரூ. 3-8-0 தபாற்செலவு தனி.

## மகரத்வஜா

எந்த நோயையும் தீர்க்கும் அற்புத ஔஷதம். தோலா ரூ. 8. சரகுண பலிஜாரிஷ்ட மகரத்வஜா. தோலா ரூ. 16. சித்தவ மகரத்வஜா தோலா ரூ. 32.

Kaviraj **R. N. CHAKRAVORTHY**, 24 Debendra Ghosh Road, Bhowanipur, Calcutta, 25.

ஸ்டாக்கிஸ்டுகள்:— அப்பா & கோ, 286, சைனாபஜார், மதராஸ்.

## அயோடிசால்

:(ரத்த சுத்தி திராவகம்):

தீரேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனுல் ஏற்படக்கூடிய வெள்ளை, வெட்டை, மேழி முடக்கு சூலைகள், வாத மேகரோகங்கள், படை, சொரி முதலியவைகளைக் குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதுடன் ரத்த விருத்தியை உண்டாக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2.

## CIBOL: சைபால்

முகப்பரு, சொரி, சிரங்கு, வேனல்கட்டி, சேத்துப் புண், தீப்பட்ட புண், நமைச்சல் முதலிய சர்ம வியாதிகட்கு சிறந்தது.

டின் 1-க்கு விலை 0-6-0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

ஏஜெண்டுகள்:—

சென்னை நகர் & ஆந்திரா:

மெஸர்ஸ். ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், பி. டி., மதராஸ்.

தயாரிப்பவர்கள்:—

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

வைத்திய ரத்னம். ராமநாத சாஸ்திரியாரின்
ஆனந்த பற்பொடி (Reg)



40 வருஷங்களாக புகழ் பெற்றது. இது ஒன்றே எங்கும் பிரசித்தி பெற்றது என்பதற்கு ஸந்தேகமே இல்லை என்று சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜ் மெண்டில் எழுதப்பட்டு இருக்கிறது. எங்கும் கிடைக்கும்.

ருக்மணி சாம்பார் & ரஸம் பொடி.
நளபாக முறையில் கைபடாமல் தயார் செய்யப்பட்டது.
★
பிரதான நகரங்களில் ஏஜண்டுகள் தேவை.
விபரங்களுக்கு:—
தேவராஜ் & கோ.,
வைசியாள் வீதி :: கோயமுத்தூர்.

இனம் வைத்திய வித்தை
பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, கலசந்ததிக்கும் வழி.
மதன மஞ்ஜரி பார்மஸி, 184 நைனியப்பன் தெரு மதராஸ்.

ஜோதிஷ வித்வான்
V. S. சேஷாத்ரியாச்சாரியார்,
45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி ஒன்றுக்கு அணா 8. ஜாதகத்துக்கு ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 3. பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

புனர் சக்தி
தங்க பஸ்பம், மகரத்துவஜம், முத்து. பவளம், அப்பிரகம், அபம், காந்தம், இன்னும் 101 ஹிமாலய மூலிகைகள் சேர்ந்தது. (இந்த புஷ்டிக்கு நிகரற்றது)
இரத்த சுத்தி, இரத்த விருத்தி, மனோபலம், தேகபலம், வீர்யபலம், அழகு, ஆரோக்கியம் உண்டாகும். ஆண், பெண் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை.
சகல வியாதிகளையும் சொஸ்தம் செய்ய வல்லது. 40-நாள் ஸேவனம் ரூ. 20.
தபால் செலவு அணா 12. வி. பி. கிடையாது.
Distributors:-
தமிழ் ஹோமியோபதி காலேஜ் ஈரோடு.

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
"சத்வைத்யசாலை, நஞ்சன்கூடு"
குடும்ப அவசியங்கள்
கஸ்மின்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பலக்ஸ்
பேதியாக மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.
டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம்.
(பிராஞ்சு: மன்னார்குடி.)
சந்தனாதித்தைலம் — அரைக்கீரைவிதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்
கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.
வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப்பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஆர். ஆர். [illegible] & கோ.,
மெஷினரி மர்ச்சண்ட்ஸ்
306, லிங்கி செட்டி தெரு, ஜி. டி. மதராஸ் 1.
★
நெல் அல்லர், மாவு, மிளகாய், சீக்காய் அரைக்கக்கூடிய மிஷின்களும், அவைகளுக்கு வேண்டிய சில்லரை சாமான்களும், பெல்டு வகையராக்களும் மற்றும் மிஷினரி சம்பந்தமான எல்லாவித சாமான்களும் சௌகர்யமாய் எங்களிடம் கிடைக்கும்.
சகாயமான விலை! உறுதியான வேலைப்பாடு!!
★
R. R. BROTHERS & CO,
MACHINERY MERCHANTS,
306, LINGI CHETTY ST., G. T., MADRAS.

கைத்தறி கலர் புடவைகள் வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள் 80நெ. 100நெ. நூலில் தயாரிப்பவர்கள்.



S. M. S. R.
பாலசுந்தரம் செட்டி
உறையூர் P. O. திருச்சி.

ருதகம் நின்றிருந்தால்
3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்குபட்டு விடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5-8. பத்து ஷிலிங்.
B. C. SERVICE, (S. M.) Churchgate St., Fort, Bombay. Phone: 21343.

தாளக பஸ்பம்
இருமல், இளைப்பு, காசம், குரலடைப்பு, தொண்டைக் கம்மல், மார்ச்சளி, சுரம், முதலிய வியாதிகளுக்கு தலை சிறந்தது.
24 நாள் அனுபானத்துடன் ரூ. 10.
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

மாத விடாய்
நின்று விட்டதா? கவலை வேண்டாம். சாஸ்திரமுறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ் பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்கிக்கும். நிகரற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம் விலை ரூ. 3-8-0 ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம் பெற்றது. தபால் செலவு அணா 12. ரோதக் கர்ப்பத்தடைக்கு சிறந்த நிகரற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5. தாற்காலிகம் ரூ. 2-8-0 தபால் செலவு அணா 12.
KJ. M. BHATTACHARYA
Kavya Vyakarantirta, Vishaga...
120/1/1. Upper Circular Road, Calcutta. 9.

ஸ்ரீ சாயிபாபா
உங்கள் அதிர்ஷ்டம்
ஆராய்ச்சியும், அனுபவமும் நிறைந்த புகழ்பெற்ற ஜோஸியரால் ஆராய்ந்து பலன்கள் நிர்ணயிக்கப்படுகிறது. விவாக விஷயம் பொருத்தம் பார்த்தும், விவாக காலம் நிர்ணயித்தும் கொடுக்க ரூ. 3. ஒரு வருஷ பலன் ரூ. 3. விவரமாக ஒரு கேள்விக்கு பலன் எழுத ரூ. 1. வருஷவாரியாக ஆயுள் பலன் ரூ. 100.
The South Indian Astrological Bureau
5/A, Ambikapuram, Chintadripet, Madras.


Printed and published by S. Chakrapani Iyengar, at the SWADESAMITRAN Power Press 3 & 4 Whites Road, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.




சுறு சுறுப்பு, ஜீவசக்தி, பிரகாசம், அழகு இவை பெறுவது மிகவும் சுலபம். பத்திரமானது. இந்த சுத்தமான தாவர டானிக் பேதி மருந்து.



பைல்பீன்ஸ் ஒழுங்காக உபயோகித்தால் உட்புற ஆரோக்யத்தை விருத்தி செய்து, அசுத்தங்களை அகற்றி, சுத்த ரத்தத்தை உண்டாக்கி, ஜீரண சக்தியையும் அளிக்கின்றது.

ஞாபகமிருக்கட்டும்! உங்களுக்கு வேண்டியது பைல்பீன்ஸ்தான். இழந்த பலத்தையும் ஆரோக்யத்தையும் அளித்து பிரகாசிக்கச் செய்யும்.

சுத்தமான தாவர மருந்து

# BILE BEANS

தினசரி படுக்கும்போது சாப்பிடவும்

---

...அறிவிப்பு

...நாரா விடு இலை தையல் ...இலை சகாயமான விலைக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம் செட்டி & கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டு தேவை.

---

கூந்தல் விருத்திக்கு சுலப சிக்கன முறை
உங்களுக்கு தேவையான எண்ணையில் கலந்து கொள்க



புனைபெட் கன்னர்ஸ்,
54, பந்தர்தெரு, மதராஸ்.

---




---

## பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒருஜாதகம் கணிக்க ரூ. 2



நேரில் ஒருஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரிஒருவருஷ பலன் எழுத ரூ. 5. ...டம் 3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அ. 8. ஜாதகம் அல்லது எழுத்து ...ரம் தேவை.

பண்டித ...
ம. ஸ்ரீ ... ,
"... " எல்டாம்ஸ் ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.

---

## —நீலாயணி மந்திரம் :

விலை ரூ. 1—0—0

தபால் செலவு பிரத்யேகம்.
சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.


1994




# இன்றைய சிநேகிதர்
## நாளைய ...

தரகர்களின் நடவடிக்கை பலவிதமானது. நீங்கள் வைரம் வாங்குவதாயிருந்தால் அநேகர் உங்களிடம் நண்பர், உறவினர் என்று உறவுகொண்டாடுவர். மேதாவியாக பாவனை செய்துகொண்டு தாங்களாகவே ஆலோசனை கூறுவர்.

பணமுதலீடு பொறுப்பு ஏதுமின்றி வைர வியாபாரத்தில் தரகர் அநேகம் பேருள்ளனர். தாங்களாகவே ஆலோசனை கூறுவது அநேகம் பேர்களுக்கு பொழுதுபோக்காகவும் லாபகரமாயும் இருக்கிறது. பாவனை செய்து பகட்டாகப் பேசுவதே அவர்களுக்கு லாபமளிக்கின்றது.



வியாபாரி தரகரை ஆதரிக்கிருர். தரகர் வியாபாரிக்காக ரகசிய வேலை செய்கிருர். இந்த வியாபாரத்தில் ரகம் உதாசினம் செய்யப்படுகிறது. உங்களுடைய நலனும் பாதிக்கப்படுகிறது.

**தரகரை விரட்டுக**

இரண்டு மூன்று பேர்களுக்குப் பதில் ஒருவரையே நம்புங்கள். உங்களுக்கு லாபமுண்டு. நாணயமான வியாபாரியை அடைந்தால் உங்களுக்கு நலனே உண்டாகும்.

பத்து வருஷம், இருபது வருஷமல்ல; மூன்று தலைமுறைகளாக ஸுராஜ்மல்ஸ், இந்தியா, பர்மா ஜனங்களுக்கு நம்பிக்கையுடன் உழைத்து புகழ்ப்பெற்றுள்ளது.

நாணயமான வியாபாரத்திற்கு

# ஸுராஜ்மல்ஸ்

## நகை வியாபாரிகள்

313, எஸ்பிளனேட்,
மதருஸ்.

பிரசித்தி பெற்ற

# சரஸ்வதி பளயகாட்

சாயத்திற்கு உத்திரவாதமுள்ளது.
உயர்ந்த நூலால், கைதேர்ந்த
நெசவாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட

...ங்கிஸ்.

மார்க்

கைலிகள்

& ஷர்ட்டிங்ஸ்

சரஸ்வதி பளயகாட் கோ.,

6, இராமசாமி தெரு, மண்ணடி, மதராஸ்.
Telegrams: "ESSPEECO" Telephone: 3787
...: கொழும்பு பெரிய காஞ்சீவரம்.

